விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு

Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 மார்கழி 03 சனிக்கிழமை (18.12.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 364

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## பதில் துணைவேந்தராக பேரா.சண்முகலிங்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதில் துணைவேந்தராக பேராசிரியர் என்.சண்முகலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார். துணைவேந்தர் பேராசிரியர் ந.சண்முகலிங்கத்தின் நியமனம் நேற்றுடன் நிறைவடைந்தது.

இந்நிலையில் பதில் துணைவேந்தராக மறு அறிவித்தல் வரும்வரை அவர் கடமையாற்றுவார் என பல்கலைக்கழக மானியங்கள் (16ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தின் உபகுழுவுக்கு மூவர் நியமனம்

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான அடிப்படைத் தீர்வுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கான உபகுழுவுக்குத் தமிழ் கட்சிகளின் அரங்கம் மூவரை நியமித்துள்ளது.

யாழ்ப்பாணம்,கிளிநொச்சி மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்த சங்கரியும் வன்னியைப் பிரதிநிதித்துவப்படுத்தி புளொட் அமைப்பின் தலைவர் ரி.சித்தார்த்தனும் கிழக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கமும் நியமிக்கப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் தலைவர் (16ஆம் பக்கம் பார்க்க)

## பியசேனவின் மனு ஜன.18இல் விசாரணை


(கொழும்பு)

இலங்கை தமிழரசுக் கட்சியிலிருந்து தன்னை நீக்குவதற்கு கட்சி தீர்மானித்திருப்பதை எதிர்த்து திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பெரும்புலி ஹேவாகே பியசேன உயர்நீதிமன்றில் செய்த மனு மீதான விசாரணையை ஜனவரி 18ஆம் திகதிவரை நீதிமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை ஒத்திவைத்தது.

கடந்த செப்டெம்பர் 8ஆம் (16ஆம் பக்கம் பார்க்க)

# பிரித்தானிய அரசாங்கம் அழுத்தம்

# லியம் பொக்ஸின் பயணம் இரத்து



(லண்டன்)

பிரித்தானிய அரசின் பாதுகாப்பு அமைச்சர் லியம் பொக்ஸ் இவ்வார இறுதியில் மேற்கொள்ளவிருந்த இலங்கைக்கான விஜயத்தினை இறுதிநேரத்தில் இரத்து செய்துள்ளார். பிரித்தானிய வெளிநாட்டமைச்சர் வில்லியம் ஹேக் கொடுத்த அழுத்தம் காரணமாகவே இப் பயணம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக நம்பப்படுகிறது. (16ஆம் பக்கம் பார்க்க)

# யாழில் அபிவிருத்தியை முன்னெடுக்க ஐந்து ஆண்டுத் திட்டம் தயாரிப்பு!

## யாழ். அரச அதிபர் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் சகல மக்களுக்கும் இயல்பு வாழ்வை ஏற்படுத்தி அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க 5 ஆண்டுத் திட்டம் வரையப்பட்டுள்ளது என யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

இதில் யாழ்.மாவட்டத்தில் இடம்பெயர்ந்துள்ள 19 ஆயிரம் குடும்பங்களை மீள்குடியமர்த்தல்,வீடற்ற மக்களுக்கு வீட்டுத் திட்டத்தில் வீடமைத்தல், 27 ஆயிரம் விதவைகளுக்கு வாழ்வாதாரத்தை வழங்கல், புற்றுநோய், இருதயநோயால் பாதிக்கப்பட்ட 246 சிறுவர்களுக்கு (15ஆம் பக்கம் பார்க்க)

# மனித உரிமை மீறல் செயல்களில் விடுதலைப்புலிகள் ஈடுபட்டனர்!

## விக்கிலீக்ஸ் தகவல் வெளியீடு

(கொழும்பு)

விக்கிலீக்ஸினால் புதிதாக வெளியிடப்பட்ட அமெரிக்க இராஜங்கத் திணைக்களத்தின் தகவல் பரிமாற்ற ஆவணத்தில் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் பற்றியும் இதனைக் கண்காணிப்புக் குழு கண்டும் காணாமல் இருந்தமை பற்றியும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் செயற்பட்ட சர்வதேச அரச (16ஆம் பக்கம் பார்க்க)

# விக்கிலீக்ஸ் வெளியிட்ட தகவல்கள் தவறானது

## அமைச்சர் டக்ளஸ் மற்றும் கருணா மறுப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்டங்களில் உள்ள தமிழ் வர்த்தகர்களை கடத்தி கப்பம் பெற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும்,பிரதி அமைச்சர் முரளிதரனுக்கும் பாதுகாப்பு அமைச்சு ஆதரவு வழங்கியதாக விக்கிலீக்ஸ் இணையத்தளம் வெளியிட்ட தகவலை இருவரும் மறுத்துள்ளனர்.

இது தொடர்பாக தமது மறுப்பை பி.பி.சி. தமிழோசையிடம் (16ஆம் பக்கம் பார்க்க)

NIBM BUILDING COMPETENCIES

A statutory Body under the Ministry of Youth Affairs & Skills Development



ஒளிமயமான எதிர்காலத்திற்கு NIBM வழிகாட்டும்

நாட்டின் நம்பிக்கை வாய்ந்த உயர் கல்வி நிலையம் வழங்கும் முகாமைத்துவ, தகவல் தொழில்நுட்ப மற்றும் ஆங்கில கற்கை நெறிகள் மூலம் வெற்றிகரமான எதிர்காலத்தில் அடியெடுத்து வையுங்கள்

- மனிதவள முகாமைத்துவத்தில் அடிப்படைக் கற்கை நெறி (ஆங்கிலத்திலும் தமிழிலும்)
- கணனித் தொழில்நுட்பத்தில் சான்றிதழ் கற்கை நெறி
- வியாபார முகாமைத்துவத்தில் சான்றிதழ் கற்கை நெறி
- ஆங்கில மொழியில் சான்றிதழ் கற்கை நெறி

தேசிய வியாபார முகாமை நிறுவனம்
40, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி இல: (021) 222 0360, 61, 62

அனுமதிகள் ஆரம்பமாகியுள்ளன!
முதலில் அனுமதிக்கப்படும் சிலருக்கு 25% கட்டணக் கழிவு.

NIBM BUILDING COMPETENCIES Jaffna யாழ்ப்பாணம்

மாபெரும் மலிவு விற்பனை

18.12.2010 சனிக்கிழமை - 24.12.2010 வரை

Special Offer!

அனைத்துப் பொருட்களும் உத்தரவாதத்துடன்



சுந்தர்சன்
மானிப்பாய்

30%
வரையான விலைக்கழிவில்

(C-1827)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்


Sale Sale Sale...
மாபெரும் மலிவு விற்பனை
லைடன் புடவை நிலையம்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க கிறிஸ்மஸ்,புதுவருடத்தை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை
01.12.2010 முதல் 01.01.2011 வரை சகல விதமான றெடிமேற் ஆடைகள் ஆண்,பெண் இருபாலாருக்கும் ஏற்ற பாடசாலை சீருடை துணி வகைகள் என்பவற்றை விசேட கழிவு விலையில் மலிவாக பெற்றுக்கொள்ளலாம்.
எதிர்வரும் 19,26ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமைகளிலும் கடை திறந்திருக்கும்
லைடன் புடவை நிலையம்
410, ஆஸ்பத்திரி வீதி (பஸ்நிலையம் முன்பாக)
யாழ்ப்பாணம்
தொலைபேசி இல : 021 222 2381
(சி-1836)





காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் தயாரித்து வழங்கும்

சிதம்பர தரிசனம்

## இறுவட்டு வெளியீட்டு விழா அழைப்பு



இடம் : ஈழத்துச் சிதம்பர வசந்த மண்டபம், காரைநகர்
காலம் : 19.12.2010 ஞாயிற்றுக்கிழமை மாலை 2.00 மணி

**தலைவர்**
திரு .ந. சோதிநாதன் (தலைவர், கிழவன்காடு கலாமன்றம், காரைநகர்)

**பிரதம விருந்தினர்**
பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்கள்
(வாழ்நாள் பேராசிரியரும், முன்னாள் துணைவேந்தரும் யாழ்.பல்கலைக்கழகம்)

**சிறப்பு விருந்தினர்கள்**
திரு.ப.விக்னேஸ்வரன் (வடமாகாணக் கல்விப் பணிப்பாளர்)
திரு.R.T. ஜெயசீலன் (உதவி அரசாங்க அதிபர் காரைநகர்)

**நிகழ்ச்சி நிரல்**

01) தேவாரம் : கலாமன்ற மாணவிகள்
02) வரவேற்புரை : திரு.இ.திருப்புகலூர் சிங்கம் (உபதலைவர் கிழவன்காடு, கலாமன்றம்)
03) ஆசியுரை : சிவஸ்ரீ. மகாதேவக் குருக்கள் (காயத்ரீபீடம் தர்மசாஸ்தா குருகுலம், இணுவில்)
சிவஸ்ரீ. ஈஸ்வரக்குருக்கள் (பிரதம குரு, ஈழத்துச் சிதம்பரம், காரைநகர்)
04) தலைமையுரை
05) பிரதம விருந்தினர் உரை
06) சிறப்பு விருந்தினர் உரைகள்
07) வெளியீட்டுரை : சங்கீத வித்துவான் திரு.பொன். ஸ்ரீவாமதேவன்
08) முதல் பிரதி வழங்கல் :
வழங்குபவர்: இசைஞான திலகம்,கலாபூஷணம், வயலின் வித்துவான் திரு.உ. இராதாகிருஷ்ணன்
பெறுபவர் : திரு. சண்முகம் சிவஞானம் (கௌரவ உறுப்பினர்,கிழவன்காடு, கலாமன்றம், காரைநகர்)
10) கலைஞர்கள் கௌரவிப்பு
11) சிறப்புப் பிரதிகள் வழங்கல்
12) நன்றியுரை : திரு.ச.இராசநாயகம் (நிர்வாக உறுப்பினர், கிழவன்காடு,கலாமன்றம், காரைநகர்)

**இசைக் கலைஞர் விபரம்**

கீர்த்தனைகள்: ஸ்ரீ கோபாலகிருஷ்ண பாரதியார்
பாடியவர் : இசைக்கலைமாணி,இராகசுரபி, காரை பரமேஸ்வரி கணேசன் (M.A,M.Pil) (சிரேஷ்ட விரிவுரையாளர், இசைத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
வயலின் : இசைக்கலைமாணி திரு. K.குகபரன் (M.A,M.Pil)
மிருதங்கம் : இசைக்கலைமாணி, திரு.B. றமணன்
தவில் : லயஞான சொரூபன். திரு. B. நர்மதன்
கெஞ்சிரா : லயஞானபாலன். திரு. S. செந்தில்நாதன்
முகர்சிங் : கலாவித்தகர். திரு. K. நந்தகுமார்
ஒலிப்பதிவு : திரு. K. சத்தியன் ஸப்தமி கலையகம்
(1644)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

# தமிழர்களுக்கு வேட்டிகட்ட பழக்கியது மேதானந்த தேரரின் மூதாதையர்கள்!

## அவர் கூறக்கூடும் என்கிறார் மனோ

.மகாவம்சத்தைத் தழுவி எழுதப்பட்டது கம்பராமாயணம் என்றும், திருவள்ளுவர் சிங்கள பௌத்தர் என்றும், கௌதம புத்தர் அம்பாந்தோட்டையில் பிறந்தார் என்றும், தமிழர்களுக்கு வேஷ்டியும், சேலையும் கட்டுவதற்கு கற்றுக்கொடுத்ததே தனது மூதாதையர் என்றும் ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் எல்லாவல மேதானந்த தேரர் நாளை கருத்து தெரிவித்தாலும் கூட ஆச்சரியப்படப்போவதில்லை என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக் குழுவின்அமர்வின்போதுஎல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்துள்ள கருத்துக்கள் தொடர்பில் மனோ கணேசன் மேலும் கூறியதாவது,

மேதானந்த தேரரின் கட்டுக்கதைகளுக்கும், மோசடிக் கருத்துக்களுக்கும் பதில் கூறி நாம் எமது நேரத்தை வீணடிக்கத் தேவையில்லை. நாடாளுமன்றத்தில்நான் இருந்தபோது கடந்த வருடம் நடந்த ஒரு சம்பவத்தை நினைவுபடுத்த விரும்புகிறேன். தமிழர்களின் தாய்நாடு இந்தியா என்றும் முஸ்லிம்களின் தாயகம் பாகிஸ்தான் என்றும் மேதானந்த தேரர் நாடாளுமன்றத்தில் கருத்துத் தெரிவித்தார். மேலும் தமிழ் பேசும் மக்களுக்கு அரசியல் அதிகாரம் தேவைப்படுமானால் தமிழர்கள் இந்தியாவிற்கும் முஸ்லிம்கள் பாகிஸ்தானுக்கும் போய்விட வேண்டும் என்றும் இவர் கூறியிருந்தார்.

அவ்வேளையில் தமிழர்கள் இந்தியாவிற்கு அனுப்பிவைக்கப் பட வேண்டும் என்றால் சிங்கள ஆண்கள் வட இந்தியாவிற்கும், சிங்கள பெண்கள் எங்களுடன் தென்னிந்தியாவிற்கும் வரவேண்டியிருக்கும் என்றும், முஸ்லிம் மக்களை பாகிஸ்தானுக்கு அனுப்பிவிட்டு முழு நாட்டையும் இத்தீவின் பூர்வீகக்குடிகளான வேடர்களிடம் ஒப்படைப்போம் என்று மேதானந்த தேரருக்கு நான் பதில் கூறியிருந்தேன்.

எனவே ஜாதிக ஹெல உறுமயவின் வரலாற்று சக்கரவர்த்தி எல்லாவல மேதானந்த தேரர் தமிழர்களின் வரலாற்றை திருத்தி எழுதுவதற்கு முன்னர் சிங்கள இனத்தின் முதல் வரலாற்று நூலான மகாவம்சத்தை திருத்தி எழுத வேண்டும் என கூற விரும்புகிறேன்என்றார். (ச-5)


வேலையாட்கள் தேவை
பொதி செய்வதற்கு பெண் பிள்ளைகள் தேவை.
கூடிய சம்பளம் வழங்கப்படும்.
அல்பா மிக்ஷர்
உடுவில் றோட்,மானிப்பாய்.
0212255278
(3249)

விற்பனைக்கு
நல்ல நிலையில் உள்ள SUPER CUP - 90 (CHINA) விற்பனைக்குண்டு.
தொடர்பு : 0718561296
C.தர்மராஜா
41, ஸ்ரான்லி கல்லூரி வீதி, அரியாலை.
(3260)






## யாழ்ப்பாணம் மாநகராட்சி மன்றம்
## வரவு செலவுத் திட்டம் - 2011

2011 ஆம் ஆண்டுக்கான கிடைக்கக்கூடிய மாநகர வருமான மதிப்பீட்டையும், உத்தேச செலவின விபரங்களையும் உள்ளடக்கிய மாநகராட்சி மன்றத்தின் வரவு செலவுத் திட்டம் 2010 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 18 ஆம் திகதி தொடக்கம் ஒரு கிழமைக்கு மாநகரசபை அலுவலகத்தில் அலுவலக நேரத்தின் போது மக்கள் பார்வைக்கு வைக்கப்படுமென மாநகரசபை கட்டளைச் சட்டத்தின் அத்தியாயம் (252), (212) பி பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

திருமதி யோ.பற்குணராஜா,
மாநகர முதல்வர்,
யாழ்ப்பாணம்.
(சி-1845)

# மரண அறிவித்தல்

## மயில்வாகனம் சுந்தரலிங்கம் [சுந்தா]



*(கிராம அலுவலர் J/66,J/67 - யாழ்ப்பாணம், முன்னாள் யாழ். மாநகர சபை உறுப்பினர் மற்றும் தலைவர் - வடக்கு கிழக்கு கிராம உத்தியோகத்தர் சங்கம் யாழ்.மாவட்டம்)*

இணுவிலைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் ஈச்சமோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் சுந்தரலிங்கம் (கிராம அலுவலர்) அவர்கள் 14.12.2010 செவ்வாய்க் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - நாகரத்தினம் தம்பதியினரின் மகனும் காலஞ்சென்ற செல்வரத்தினம் மற்றும் பத்மாதேவி (கனடா) தம்பதியினரின் மருமகனும், லலிதா (செல்வி)வின் பாசமிகு கணவரும், சிந்துஜன் (இணைமருத்துவ விஞ்ஞானம் 2ம் வருடம், யாழ் பல்கலைக்கழகம்), யதுர்சன், நிருஜன் (2ம் வருட வர்த்தக முகாமைத்துவ பீடம் கிழக்கு பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மகேந்திரராஜா (சுவிஸ்), தனபாலசிங்கம்(அவுஸ்திரேலியா), திலகவதி (கனடா), காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் மற்றும் யோகேஸ்வரன் (அவுஸ்திரேலியா), பத்மாவதி (மணி), காலஞ்சென்ற தவராசா ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரிகைகள் 19.12.2010 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு தகனக்கிரியைக்காக கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

94, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம்.
(021 222 7075)

தகவல்
குடும்பத்தினர்.
(3261)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## மரியாதை

மகான் குருநானக் உபதேசம் பண்ணிக்கொண்டிருந்த காலம் அது. அவருக்கு பின்னால் ஏகப்பட்ட கூட்டம். போகுமிடமெல்லாம் மக்கள் வெள்ளம். அவர் எந்த ஊருக்குப் போனாலும் எல்லோரும் பின்னாலேயே போனார்கள்.

இந்தக் கூட்டத்தையும் அவர்களிடமிருக்கும் ஆர்வத்தையும் பார்த்துவிட்டு ஒருத்தர் ஆச்சரியப்பட்டுப் போனார்.

அவர் நேராகப் போய் குருநானக்கை பார்த்தார்.

" ஆகா! உங்களுக்குத்தான் எத்தனை ஆயிரம் சீடர்கள்?" என்றார்.

இதைக் கேட்டு குருநானக் இலேசாகச் சிரித்தார். பதில் எதுவும் சொல்லவில்லை.

சிறிது நாட்களுக்குப் பின் குருநானக் இன்னொரு ஊருக்குப் புறப்பட்டார். ஆயிரக்கணக்கான சனங்கள் 'குருமகாராஜ் கி ஜே' என்று கோஷம் எழுப்பிக் கொண்டு பின்னால் போய்க்கொண்டிருந்தார்கள்.

ஒரு வீதியோரமாக போய்க் கொண்டிருக்கும் போது, திடீரென்று ஓரிடத்தில், ஆகாயத்திலிருந்து செப்புக் காசுகள் மழை மாதிரி கொட்டியது. கோஷம் போட்டுக் கொண்டுவந்தவர்களில் அரைவாசிப் பேர் உடனே கலைந்து ஓடினார்கள்.

அவரவர்களுக்கு கிடைத்த செப்புக் காசையெல்லாம் பொறுக்கினார்கள். மடியில் கட்டிக்கொண்டு குருநானக்கிடம் சொல்லாமல் கொள்ளாமல் நழுவிப் போய் விட்டார்கள்.

அவர் இதையெல்லாம் கவனிக்காமல் தொடர்ந்து போய்க் கொண்டிருந்தார். அடுத்த ஊருக்குப் போனார். அங்கே மறுபடியும் பணமழை கொட்டியது.

போன முறை செப்புக்காசு கொட்டியது. ஆனால் இந்த முறை வெள்ளிக்காசு கொட்டியது. இப்பொழுது கூட்டத்திலிருந்த அரைவாசிப் பேர் கலைந்து ஓடினார்கள். முடிந்தளவுக்கு வெள்ளிக்காசை அள்ளி எடுத்துக் கொண்டார்கள். நல்ல பிள்ளைக்கு அடையாளமாக சொல்லாமல் கொள்ளாமல் நழுவிப் பேய்விட்டார்கள்.

குருநானக்' தொடர்ந்து போனார். இன்னொரு ஊரில் மறுபடியும் பணமழை கொட்டியது. இந்தத் தடவை தங்கக் காசுகள் வந்து விழுந்தன. இதைப் பார்த்ததும் மீதி இருந்தவர்களும் கலைந்து ஓடினார்கள். தங்கக் காசை அள்ளிக் கொண்டு 'அம்பேல்' ஆகிவிட்டார்கள்.

குருநானக் திரும்பிப் பார்த்தார்.

கடைசியாக எஞ்சியிருந்தவர் ஒரே ஒரு சீடர்தான். செப்புக்காசு, வெள்ளிக்காசு, தங்கக்காசு எதையும் பொருட்படுத்தாமல் இவருக்குப் பின்னால் வந்து கொண்டிருந்தது அவர் ஒருத்தர் மட்டும்தான்.

' நீதானப்பா என்னுடைய உண்மையான சீடன் என்று சொல்லி வாழ்த்தி அவரிடம் தன்னுடைய பணிகளை ஒப்படைத்தார் குருநானக்.

இந்தக் கதையைக் கேட்டதும் உண்மைக்கு ஏன் மரியாதை குறைந்துபோய் விட்டது என்பது புரிகிறது.

நல்லவர்களின் பின்னால் போற கூட்டம் குறைவதற்கு இது தான் காரணம்.

இந்தக் காலத்தில் காசுதான் முக்கியமென்று நினைப்பவர்கள் அதிகமாகி விட்டார்கள். காசு முக்கியம் தான். இல்லையென்று சொல்லவில்லை. ஆனால் காசு நமக்கு அடிமையாக இருக்க வேண்டும். வேலைக்காரன் மாதிரி இருந்து வேண்டியதை வாங்கிக் கொடுக்க வேண்டும்.

நாம் காசுக்கு அடிமையாகும் போது தான் விவகாரம் ஆரம்பம். இந்தக் காலத்து குரு ஒருத்தர் இருந்தார். அவருக்குப் பின்னால் ஒரு காலத்தில் ஏகப்பட்ட சீடர்கள் இருந்தார்கள்.

ஒவ்வொரு கட்டத்தில் ஒவ்வொருவராக நழுவிப் போய் விட்டார்கள். இப்பொழுது மிஞ்சியிருப்பது ஒரே ஒரு சீடன் தான். மிகவும் பவ்வியமாக கையைக்கட்டிக்கொண்டு அவருக்கு முன் உட்கார்ந்திருந்தான்.

" கடைசியில் நீ மட்டுமாவது இருக்கிறாயே அது போதும். நீதான் எனக்கு உண்மையான சீடன்" என்றார் குரு. அதற்கு அந்த சீடன் " அப்படி இல்லை சுவாமி. நீங்கள் இப்பொழுது உட்கார்ந்திருக்கும் பீடத்துக்கு அடியில் பெட்டியில் பணம் வைத்திருக்கிறீர்கள். அது எனக்குத் தெரியும்.

அதனால் நீங்கள் எப்ப எழுந்து அந்தப் பக்கம் போவீங்க என்று பார்த்துக் கொண்டிருக்கிறேன்." என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# பிள்ளைகளின் நடவடிக்கைகள் குறித்து பெற்றோர்கள் கண்காணிக்க வேண்டும்

## சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

பிள்ளைகளின் அன்றாட நடவடிக்கைகளை கண்காணித்து அவர்களின் முன்னேற்றகரமான வாழ்க்கைக்கு பெற்றோர்கள் அக்கறையுடன் செயற்பட வேண்டும் என சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நந்தன விஜயரத்தின தெரிவித்துள்ளார்.

சட்டவிரோத நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் நேற்று நாவலர் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கருத்துரைக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்டத்தில் வன்முறைகள் அதிகரித்து வருகின்ற நிலையில் மக்களை பாதுகாக்க தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். சகல வழிகளிலும் இது தொடர்பாக கலந்துரையாடி வருகின்றோம்.

மக்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளை கட்டுப்படுத்த நடமாடும் பொலிஸ் சேவையை ஆரம்பித்துள்ளோம். இதன் மூலம் மக்களின் இருப்பிடங்களுக்கு சென்று அவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகான முயற்சித்து வருகிறோம்.

நாட்டின் பல பாகங்களில் சட்ட விரோத நடவடிக்கைகள் நடைபெற்றுவருகின்றன. அண்மையில்கொழும்பில் உள்ள பாடசாலை ஒன்றின் அருகாமையில் பெண்களுக்கான அழகு சாதனப் பொருட்கள் விற்பனை செய்யும் கடையொன்றில் போதைப்பொருள் விற்பனை செய்யப்பட்டு வருவதை அறிந்து அந்தக் கடையை சோதனையிட்ட போது 6 1/2 கிலோ போதைப்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

பாடசாலை மாணவர்களுக்கு இத்தகைய போதைப்பொருள் விற்பனை களை மேற்கொள்பவர்களை இனம் கண்டு சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனினும் பெற்றோர்கள் , ஆசிரியர்கள் , சமூகத்தினர் சிறுபிள்ளை களினதும் பாடசாலை மாணவர்களினதும் நடவடிக்கைகளை, கண்காணிப்பது அவசியமானது . சிறுவர்கள் பலர் தவறான செயற்பாடுகளுக்குட்படு த்தப்படுகின்றமையும், ஆபாசப்படங்கள் பார்த்தல் போன்ற சட்ட விரோத பழக்கங்களுக்கு ஊக்குவிக்கப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மக்களிடம் இவ்வாறான நடவடிக்கைகள் தொடர்பாக போதிய விழிப்புணர்வு இன்மையும் இத்தகைய சமுதாய சீர் கேடுகள் ஏற்பட காரணமாகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2-6)

# ஜெயபுரம் பகுதியில் அண்மைக்காலமாக திருட்டுச் சம்பவங்கள் அதிகரிப்பு

பூநகரி ஜெயபுரம் பகுதியில் அண்மைக்காலமாக இரவு வேளைகளில் கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. கடந்த வாரம் நள்ளிரவு நேரத்தில் ஆயுதங்களுடன் வந்த கொள்ளைக் குழுவினர் ஜெயபுரத்தில் உள்ள இரு வீடுகளில் புகுந்து ஆயுதங்களைக் காட்டி பயமுறுத்தி கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

இச்சம்பவத்தின் போது ஒரு வீட்டில் 6 1/2 பவுண் தாலிக்கொடி , 25 ஆயிரம் ரூபா பணம் ஒரு சோடிகாப்பு என்பவற்றையும் இன்னொரு வீட்டில் 6 ஆயிரம் ரூபா பணம், ஒரு சோடி காப்பு என்பவற்றை அபகரித்து சென்றுள்ளனர்.

இவ்விரு சம்பவம் தொடர்பாக முழங்காவில் பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டதை அடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மேற்படி சம்பவம் நடைபெறுவதற்கு முன்னதாக முழங்காவில் பொலிஸ் பகுதியினர் கிராமசேவகர்களையும் நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் அழைத்து கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக விழிப்புணர்வு கருத்தரங்கொன்றை நடாத்தியமை குறிப்பிடத்தக்கது. இச்சம்பவத்தால் ஜெயபுரம் பகுதி மக்கள் அச்சம் அடைந்த நிலையில் உள்ளனர். (ஸ்ரீ-3-84)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 200 | 130 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 140 | 200 | 200 |
| தக்காளி | 100 | 120 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 50 |
| கோவா | 80 | 100 | 80 |
| கரட் | 80 | 100 | 90 |
| பூசணி | 50 | 40 | 40 |
| புடோல் | 110 | 120 | 100 |
| வாழைக்காய் | 40 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 200 | 200 | 180 |
| பெரிய வெங்காயம் | 150 | 160 | 140 |
| பாகற்காய் | 200 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 60 |
| கருணைக் கிழங்கு | 50 | 80 | 60 |
| பயற்றங்காய் | 200 | 200 | 200 |
| லீக்ஸ் | 120 | 140 | 100 |
| பீற்றூட் | 100 | -- | 100 |
| கறிமிளகாய் | 200 | 240 | 120 |
| முருங்கைக்காய் | 250 | -- | -- |
| போஞ்சி | 120 | 150 | 150 |
| கத்தரிதம்புள்ள | 120 | 160 | 120 |
| கீரை - 1 பிடி | 40 | 40 | 40 |
| தேசிக்காய் | 100 | 100 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40-50 | 45 |

# இராசி பலன்

*18.12.2010*
*(மார்கழி 03, சனிக்கிழமை)*
*துவாதசி பிற்பகல் 2.43 மணிவரை*
*பரணி பிற்பகல் 3.44 மணிவரை*
*இராகுகாலம் 9.23-10.53 மணிவரை*
*சுபநேரம் 3.23-4.53 மணிவரை*
*சனிப் பிரதோஷ விரதம் , கார்த்திகை விரதம்.*

**மேடம்** திட்டமிட்ட காரியமொன்றில் திடீரென மாற்றம் செய்வீர்கள், வேலைச்சுமை அதிகரிக்கும், சுப செலவுகள் அதிகரிக்கும், நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள்.

**இடபம்** குலதெய்வ வழிபாட்டில் அக்கறை செலுத்துவீர்கள், பிரியமான சிலரை சந்திக்கும் வாய்ப்புண்டு, பிரயாண அலைச்சலுண்டு, சயனசுகக் குறைவுண்டு.

**மிதுனம்** பொருட்களின் சேர்க்கையுண்டு, இனிய செய்திகள் வந்து சேரும் நாள், எடுத்த கருமங்கள் எளிதில் நிறைவேறும், அந்நிய தேசத் தொடர்புகள் அனுகூலமாக அமையும்.

**கடகம்** கண்ணியமிக்க ஒருவரின் சந்திப்பு அமையலாம், பயணத்தால் பண வரவு கிடைக்கலாம், தேகநலன் புத்துணர்வு பெறும், சொத்து வாங்க புதிய திட்டம் தீட்டுவீர்கள்.

**சிங்கம்** மறைமுகப் போட்டிகள் குறைந்து தொழில் அபிவிருத்தியேற்படும், புத்திசாதுரியமாக நடந்து காரியம் சாதிக்கும் நாள், பிரயாண நன்மையுண்டு.

**கன்னி** கவலைகள் தீர கடவுளை வழிபட வேண்டிய நாள், எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்படலாம், கௌரவக்குறைவான நாள்.

**துலாம்** இணையத் தொடர்புகள் மூலம் பெருமையடைய வேண்டிய நாள், குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்** தடைப்பட்ட பணிகள் மீண்டும் நிறைவேறலாம், தொழில் வளர்ச்சிக்கு பிற இனத்தவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், நோய் குணமடைந்து ஆரோக்கியம் கிடைக்கும்.

**தனுசு** மனதில் உற்சாகமும், மகிழ்ச்சியும் அதிகரிக்கும் நாள், புத்திரர் மூலம் பெருமையடையும் சூழ்நிலை உருவாகும், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள்.



**மகரம்** வரவேண்டிய பண வரவுகள் வந்து சேரலாம், விருந்து விழாக்களில் கலந்து கொள்ளும் சூழ்நிலையுண்டு, சுப செலவுகள் இடம் பெறலாம்.

**கும்பம்** இனிமையான நாள், தன்னம்பிக்கை அதிகரிக்கும், சகோதரர்களின் ஒத்துழைப்பால் புத்துணர்வு பெறுவீர்கள், பொருளாதார நிலை உயரும்.

**மீனம்** பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு, பொது நல ஈடுபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்.வண்ணை ஸ்ரீ வெங்கடேசப் பெருமான் ஆலயத்தில் நேற்று இடம்பெற்ற சுவர்க்கவாயில் ஏகாதசி விரத நிகழ்வில் சுவாமி பக்தர்களுக்கு அருட்காட்சியளிப்பதை படங்களில் காணலாம். (படங்கள்: என்.குமார்)

## உதைபந்தாட்ட அரையிறுதிப்போட்டி

(கரவெட்டி)

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தில் அங்கம் வகிக்கும் 45 லீக் அணிகளுக்கிடையில் நடைபெற்று வந்த உதைபந்தாட்ட போட்டிகளின் அரையிறுதிப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கொழும்பு சிபியல் விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இதில் பருத்தித்துறை லீக் அணியை எதிர்த்து நீர்கொழும்பு லீக் அணி மோதவுள்ளது.

மற்றுமொரு அரையிறுதிப் போட்டியில் அநுராதபுர லீக் அணியை எதிர்த்து கொழும்பு லீக் அணி மோதவுள்ளது.

இப்போட்டிகளில் வெற்றிபெறும் அணிகள் கொழும்பில் நடைபெறும் இறுதிப் போட்டிக்கு தெரிவாகும். (ஸ்ரீ-3-24)

## மாநாடு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

மனித உரிமைகள் இல்லம் மற்றும் சிந்தனைக்கூட வட்டத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டு யாழ்ப்பாண பொதுநூலக கேட்போர்கூடத்தில் இன்றும் நாளையும் இடம்பெற இருந்த வடக்கு மற்றும் கிழக்கு அபிவிருத்தி சம்பந்தமான மாநாடு தவிர்க்க முடியாத காரணங்களினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதற்கான திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் என மனித உரிமைகள் இல்லம் மற்றும் சிந்தனைக்கூடம் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஸ்ரீ-4)

## 'அவை' அமைப்பின் 31வது இலக்கியக் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

'அவை' அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெறும் இலக்கியக் கலந்துரையாடல் தொடர் -31 இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.15 மணிக்கு அல்வாய் வடமேற்கில் உள்ள கலையகத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் ''ஈழத்துச் சொற்பொழிவின் செல்நெறி'' என்ற பொருளில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசனும் 'சர்வதேச எழுத்தாளர் மகாநாடு' என்ற பொருளில் எழுத்தாளர் லெ.முருகபூபதி (அவுஸ்திரேலியா) அவர்களும் கருத்துரை வழங்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் ஆர்வலர்களைக் கலந்து கொள்ளுமாறு 'அவை' அமைப்பின் தலைவர் கலாநிதி த.கலாமணி கேட்டுள்ளார். (ந-4)

## மதுப்பிரியர்களின் அட்டகாசத்தை தடுக்க உரிய தரப்பினர் முன்வர வேண்டும்

### மக்கள் கோரிக்கை

(நவாலி)

நவாலி ஆனைக்கோட்டைப் பகுதியில் மதுப்பிரியர்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளது.

ஆனைக்கோட்டை மூத்த நயினார் ஆலயத்திற்கு அருகில் இருக்கும் மதுபான விற்பனை நிலையத்தில் மதுபானம் வாங்குவர்கள் பொது இடங்களில் மது அருந்துவது தடைசெய்யப்படிருப்பதால் அருகில் இருக்கும் ஒழுங்கைகளில் நின்று மது அருந்துகிறார்கள்.

இதனால் இவ் ஒழுங்கையால் செல்வதற்கு பெண்கள் மற்றும் பொது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இதனைவிட சிலருக்கு மதுவை வாங்கிக் கொடுத்து அவர்கள் நிலை தடுமாறும் போது அவர்களுடைய உடைமைகளை அபகரித்துச் செல்கின்ற சம்பவமும் இடம்பெறுகின்றது.

அத்துடன் நவாலி தெற்குப் பகுதியில் சட்ட விரோத மது விற்பனைகளும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இதனைக் கட்டுப்படுத்த உரிய தரப்பினர் முன்வரவேண்டுமென அப்பகுதி மக்கள் கேட்டுக்கொள்கின்றனர். (ஸ்ரீ-3-26)

## வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய முச்சக்கர மோட்டார் ஊர்தி சேவை சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ்.பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் உள்ள ரிம்மர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே இக்கூட்டத்தில் சங்க உறுப்பினர்களை அனைவரையும் கலந்து கொள்ளுமாறு இச்சங்கத்தின் தலைவர் நல்லதுரை குகானந்தராஜா கேட்டுள்ளார். (ஸ்ரீ-4)




## அமரர் பொன்.நாகமணியின் 14 ஆவது ஞாபகார்த்ததினம்

(சாவகச்சேரி)

மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலைய நிறுவுநர் அமரர் பொன். நாகமணியின் 14 ஆவது ஞாபகார்த்த தினமும் முதியோர் கௌரவிப்பு நிகழ்வும் இன்று மாலை 3.30 மணிக்கு மட்டுவில் தெற்கு வளர்மதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

நிலையத்தலைவர் சி.பகீசன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச ஈழமக்கள் ஜனநாயக முன்னணி அலுவலக நிர்வாகி அருணாசலம் சந்திரன், தென்மராட்சி பிரதேச இணை அமைப்பாளர் முகுந்தன் செல்வரத்தினம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இதில் முதியோர்கள் கௌரவிப்பு, பரிசில் வழங்கல், கல்வி உபகரணங்கள் வழங்கல் ஆகிய நிகழ்வுகள் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-3-29)

## உடும்பைப்பிடித்து தன்வசம் வைத்திருந்த நபருக்கு அபராதம்

(கரவெட்டி)

காட்டுப் பகுதியிலிருந்து உடும்பொன்றை உயிருடன் பிடித்து தன்வசம் வைத்திருந்த நபரை சாவகச்சேரி நீதிமன்றம் அபராதம் விதித்து எச்சரித்து விடுவித்துள்ளது.

சாவகச்சேரி காட்டுப் பகுதியில் வேட்டையாடி உடும்பை உயிருடன் பிடித்து தன் வசம் வைத்திருந்தவேளை குறித்த நபர் சாவகச்சேரி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் எஸ். கணபதிப்பிள்ளை முன்னிலையில் மன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டார்.

சந்தேக நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு நீதவான் 5 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டதுடன் சான்றுப் பொருளான உடும்பை காட்டில் விடுமாறு உத்தரவிட்டுள்ளார். (ஸ்ரீ-3-24)

## பாரதி முன்பள்ளியின் ஆண்டு விழா

(சாவகச்சேரி)

நுணாவில் கிழக்கு சர்வசாதன சங்க சனசமூக நிலையத்தின் பாரதி முன்பள்ளி ஆண்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-3-29)

## வடமராட்சியில் அண்மைக்காலமாக குற்றச்செயல்கள் அதிகரிப்பு

(கரவெட்டி)

வடமராட்சி பிரதேசங்களில் அண்மைக் காலமாக அதிகரித்துள்ள குற்றச் செயல்களைத் தடுத்து நிறுத்தி குற்றவாளிகளை விரைந்து கைது செய்ய வேண்டுமென்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அப்பிரதேசத்தில் கடந்த மே மாதத்திற்கு பின் அதிகளவான குற்றச் செயல்கள் இடம்பெற்றுள்ளன.

இதில் 5 கொலைகள், அதிகமான கொள்ளைச் சம்பவம் , சிறுவர் துஷ்பிரயோகம் , சட்ட விரோத மதுபான விற்பனை, ஆட்கடத்தல் முயற்சிகள் போன்றவை இடம்பெற்றுள்ளதுடன் மக்கள் இரவு வேளைகளில் அச்சநிலையில் வாழவேண்டிய சூழ்நிலையும் காணப்படுகின்றன.

இதுபோன்ற சம்பவங்கள் இனிவரும் காலங்களில் இடம்பெறாமல் இருக்க உரிய தரப்பினர் முன்வரவேண்டும் என்று கேட்டுள்ளனர். (ஸ்ரீ-3-24)

## ஜி.ரி.இசற் நிறுவனத்தினால் பயிற்சிக் கருத்தரங்கு

(அல்வாய்)

தரம் 6 தொடக்கம் தரம் 9 வகுப்புகளில் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களை கற்பிக்கும் பாடங்களுக்கென நியமனம் பெறாத ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்கான சாதனங்களை தயாரிக்கும் கட்டம் II பணிகள் ஜி.ரி.இசற் நிறுவனத்தினால் திருகோணமலையில் நடைபெறவுள்ளது.

இதற்கென வடமாகாணத்தில் உள்ள சகல வலயங்களிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட 20 வளவாளர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு இம் மாதம் 19 ஆம் திகதி தொடக்கம் 23 ஆம் திகதி வரை திருகோணமலையிலுள்ள தொழிற்பயிற்சி நிலையம் உப்புவெளி என்ற முகவரியில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி வகுப்பிற்கு பங்குபற்றும் வளவாளர்கள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான தங்குமிட உணவு வசதி என்பன ஜி.ரி.இசற் நிறுவனத்தினால் வழங்கப்படும். இச் செயலமர்விற்கு வருகை தரும் வளவாளர்கள் தரம் 6 தொடக்கம் தரம் 9 வரையான கலைத் திட்டம் மற்றும் புத்தகங்கள் என்பனவற்றை எடுத்து வருமாறு வட மாகாண மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர் எம்.இராதாகிருஷ்ணன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழினம் தனித்துவமான தேசிய இனம்



இலங்கையைப் பொறுத்தவரையில் தமிழ் தேசிய இனம் மற்றும் சிங்கள தேசிய இனம் என்று இரண்டு தேசிய இனங்கள் (Two Nations) இருப்பதைக் குறிப்பிட்டு இரு தேசிய இனங்கள் ஒரு நாடு (Two Nations:One Country) என்ற கருத்தைத் தெரிவித்து கடந்த ஜுலை மாத நடுப்பகுதியில் ஒரு கட்டுரையை எழுதியிருந்தேன்.

அந்தக் கட்டுரையின் இறுதிப்பகுதியில் One Nation: One Country "ஒரு நாடு: ஒரே மக்கள்" என்ற சுலோகம் திரும்பிய இடமெல்லாம் காட்சியளிக்கின்றமை பற்றி குறிப்பிட்டிருந்தேன். இந்தக் கருத்து கடந்த நவம்பர் மாதம் பத்தொன்பதாம் திகதி தமது இரண்டாவது பதவிப் பிரமாணத்தின் போதும் ஜனாதிபதி அவர்களால் தெரிவிக்கப்பட்டதையும் காணக்கூடியதாகவிருந்தது.

இந்தக் கருத்தை உணர்ந்து கொண்டே தமிழரசுக் கட்சியும், அதன் தலைமையும் செயற்பட்டதை இளைய சந்ததியினருக்கு தெரியப்படுத்த வேண்டிய தேவை இருப்பது உணரப்படுகிறது. இந்தக் கருத்து தமிழினத்தின் தனித்துவமான வரலாற்று இருப்பையே கேள்விக் குறியாக்குகிறது என்பதை எவரும் கேள்விக்குட்படுத்த முடியாது.

இதை முன்கூட்டியே தமிழரசுக் கட்சித் தலைமை உணர்ந்திருந்ததை இரண்டு ஆவணங்களிலிருந்து காணலாம்.

முதலாவதாக தந்தை எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்கள் International Commission of Jurists அமைப்புக்கு எழுதிய 04.09.1973 ஆம் திகதிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

'The Tamils of Ceylon are historically a separate nation distinct from the Sinhalese in language, Religion, Culture, History and tradition and occupying a separate territory in Ceylon. The Claehorn Minute of 1799 at the beginning of the British Rule in Ceylon States' Two different nations divided between them the possession of the Island. First the Sinhalese inhabiting the interior of the Country in its Southern and Western parts from the river wallawa to that of Chilaw, and secondly the Malabars (Tamil) who possessed the Northern and Eastern Districts.

These two nations differ entirely in their religion, language and manners. Linguistically one with the Tamils are the Tamil speaking muslims the larger proportion of whom live in the traditional Tamil Territory.

### இதன் தமிழாக்கம்

இலங்கைத் தமிழர்கள் மொழியால், மதத்தால், கலாசாரத்தால்,வரலாறு மற்றும் பாரம்பரியத்தால் முழுமையாக வேறுபட்ட இலங்கையின் தனியான பிரதேசத்தில் வசிக்கின்ற ஒரு தனித்துமான தேசிய இனமாகும். இலங்கையில் பிரித்தானிய ஆட்சியின் ஆரம்ப காலத்தில் கிளகோன் குறிப்பு இப்படிக் கூறுகிறது."இரண்டு தேசிய இனங்கள் தீவின் உரிமையை தமக்கிடையே பிரித் திருந்தனர். முதலாவது வளவை ஆற்றிலிருந்து சிலாபம் வரையான தெற்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் சிங்களவர்கள் வசித்து வந்த அதே நேரம் இரண்டாவதாக வடக்கு மற்றும் கிழக்கு மாவட்டங்களை மலபார் (தமிழர்கள்) உரிமையாகக் கொண்டிருந்தனர்.

இந்த இரண்டு தேசிய இனங்களும் தமது சமயம்,மொழி மற்றும் பழக்க வழக்கங்களில் முழுமையாக வேறுபட்டவர்கள். மொழியால் தமிழர்களோடு ஒன்றாகிய தமிழ் பேசும் முஸ்லிம்களின் பெரும் பகுதியினர் பாரம்பரிய தமிழ் பிரதேசத்திலேயே வசிக்கின்றனர்.

மேலும்" Thus it will be seen that the Tamils who are a separate nation are now classified as a minority" "ஒரு தனித்துவ தேசிய இனமான தமிழர்கள் சிறுபான்மையினர் என வகைப்படுத்தப் பட்டுள்ளனர் என்பதைக் காணலாம்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறுபான்மையினருக்கு எதிரான பாகுபாடான சட்டங்களும், நிர்வாக நடவடிக்கைகளும் என்ற உப தலைப்பின் கீழ் பின்வருமாறு கூறப்படுகிறது.

" Every Government..... has been following a uniform policy aimed at converting the bi- national state of Sri Lanka into a Uni-national state with one language-the Sinhala language, one religion- the religion of the Budha and one nation -the Sinhala nation "

### தமிழாக்கம்

ஒவ்வொரு அரசாங்கமும் இரு தேசிய இனநாடான இலங்கையை ஒரு மொழி- சிங்கள மொழி, ஒருமதம் - புத்தமதம் , ஒரு தேசிய இனம் சிங்கள தேசிய இனம் என்ற ஒருதேசிய அரசாக மாற்றுவதற்கான நோக்கத்தைக் கொண்ட ஒரே விதமான கொள்கையே பின்பற்றி வருகின்றனர்.

சிங்களக் குடியேற்றம் தொடர்பாக பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது.

" State aided colonization was intended not only to further diminish the electoral and political power of the Tamils but also to liquidate their traditional homeland"

### தமிழாக்கம்

அரச ஆதரவு குடியேற்றங்கள் தமிழர்களின் தேர்தல் மற்றும் அரசியல் பலத்தை மேலும் குறைப்பது மட்டுமன்றி அவர்களது பாரம்பரிய தாயகத்தை அழித்தொழிக்கும் நோக்கம் கொண்டதாகும்.

இரண்டாவதாக தமிழரசுக்கட்சியின் சிந்தனைச் சிற்பி என வர்ணிக்கப்பட்ட அமரர் எஸ்.கதிரவேற்பிள்ளை, (பா.உ) அவர்கள் எழுதிய "Co-existence: Not Confrontation" முரண்பாடு அல்ல சக வாழ்வு என்ற சிறிய கைநூலிலும் இரு தேசிய இனங்கள் "Two Nations" என்ற விடயத்தை 1799 இன் கிளெஹோன் குறிப்பை மேற்கோள் காட்டி "Two Nations" இரு தேசிய இனங்கள் என்பதை வலியுறுத்தியுள்ளார்.

மேலும் இணைப்பாட்சி முறைமையை வலியுறுத்திய அவர் "In short, the Sinhala ideal of one country,one nation, one language etc'' சுருக்கமாகக் கூறின் சிங்களவர்களின் குறிக்கோளான ஒரு நாடு, ஒரு தேசிய இனம், ஒரு மொழி என்பது பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

இவற்றிலிருந்து இலங்கைத் தமிழரசுக் கட்சியானது தமிழினத்தின், தனித்துவமான இனம்,மொழி, மதம், கலாசாரம், தாயகம், சுயநிர்ணய உரிமை, சமஷ்டி முறைத் தன்னாட்சி என்ற இலட்சியங்களையும், இவற்றை மறுதலிக்கும் நடவடிக்கைகளுக்கும், அரச ஆதரவு சிங்கள குடியேற்றங்களுக்கு எதிராக குரல் கொடுப்பதும், செயற்படுவதுமே இலட்சியமாக வரித்துக்கொண்டு உருவாக்கப்பட்டு கடந்த அறுபத்தொரு வருடங்களாக நிலைத்து நிற்கிறது என்பது தெளிவாகும்.

தமிழர் ஐக்கிய முன்னணி உருவாக்கத்துடன் அல்லது தந்தை செல்வா தமிழ் மக்களை இனிக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும் என்ற கூற்றுடன் தமிழரசுக் கட்சியின் செயற்பாடுகள் முடிவுக்கு வந்து விட்டன என்று கூறும் ஒருசிலர் ஒருபுறமும், தந்தை செல்வா போன்றவர்களின் கருத்துக்களை தெரிந்து கொண்டாலே எதிர்காலத்தில் தமிழினம் தனது தனித்துவத்தைப் புரிந்து கொள்ளும் என்று கூறுபவர்கள் அநேகரும் எம் மத்தியில் உள்ளனர்.

மேலே குறிப்பிட்டுள்ள தமிழரசுக் கட்சியின் அபிலாசைகள், இலட்சியங்கள் என்பவற்றில் ஒன்றாவது இன்றைய சமகாலத்தில் வலுவிழந்திருக்கின்றதா என்று கேட்டால் அவை வலுவிழக்கவில்லை என்று மட்டுமல்ல அவை இப்பொழுது மேலும் வலுவடைந்திருக்கின்றன என்றே எவரும் கூறுவர்.

ஆகவே தமிழரசுக் கட்சியின் கொள்கைகள் தொடர்ந்து தமிழ் மக்களின் அரசியல், சமூக பொருளாதார கொள்கைகள், கோட்பாடுகள், இலட்சியங்கள் ஆகியவற்றை வழிநடத்துகின்றன என்பதை கருத்தில் கொண்டு இனங்கள் கட்சி நலனுக்கு அப்பாலே தமிழின நலன் சார்ந்தது என்பதையும் கருத்திற் கொண்டு, தமிழினத்தின் தனித்துவத்தையும், தன்மானத்தையும் காத்து ஐக்கிய இலங்கைக்குள்ளான ஒரு தன்னாட்சி அமைப்பை உருவாக்க உலகிலுள்ள எல்லா ஜனநாயக அரசியல் வழிமுறைகளிலும் செயற்பட வேண்டிய காலகட்டத்தில் நாம் இருக்கின்றோம் என்பதை வலியுறுத்தலாம்.

ஒவ்வொரு மனிதனும் தனது பெயர் மூலம் தன்னை அடையாளப்படுத்துவது போல் ஒரு இனம் தனது தனித்துவத்தை அதன் மொழி,மத, கலாசார,வரலாற்று விழுமியங்களுடன் தனது பாரம்பரிய வாழ்விடத்தையும் பேணுவதன் மூலமே பேண முடியும்.

**சீ.வீ.கே.சிவஞானம்**
துணைச்செயலாளர்,
இலங்கை தமிழரசுக் கட்சி,
முன்னாள் யாழ்.மாநகரசபை ஆணையாளர்.

தமிழினத்தின் விடுதலை இலட்சியங்களை அடைவதற்கு அகிம்சை வழியிலும், ஆயுதப் போராட்ட வழியிலும் முயன்றிருக்கின்றோம். இவை இரண்டும் செயற்பாட்டு வடிவங்களே. இவை மாறலாம். ஆனால் இலட்சியங்கள் மாறமுடியாது. யுத்தத்தின் முடிவு இலட்சியங்களின் முடிவு அல்ல, இன்றைய உலக மாற்றங்களைக் கருத்திற் கொண்டு, எமது இலட்சியம் நோக்கிய ஜனநாயக வழிமுறைகளில் செயற்படுவது அவசியமாகிறது.

ஒருவேளை இவை குறுகிய எதிர்காலத்தில் சாத்தியமாகாதுவிடினும், எதிர்காலத்தில் நிச்சயமாக சாத்தியமாகும். விடுதலை நோக்கிய தமிழினத்தின் அஞ்சலோட்ட தீபத்தை ஏந்திய நகர்வு அறுபது வருடங்களாக தொடர்ந்தது போல மேலும் தொடர வேண்டும்.இனப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு கிட்டும் வரை அது தொடரும்.

ஒரு அமைதி மாற்றம் (Silent Change) இடம்பெறும் என்ற திடசங்கற்ப நம்பிக்கையோடு நாம் நகர வேண்டும்.

## கேரளாவிலிருந்து தேங்காயை இறக்குமதி செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டில் நிலவும் தேங்காய் தட்டுப்பாட்டை நீக்கும் நடவடிக்கையாக தேங்காய் இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தேங்காய்க்கு நிலவும் தட்டுப்பாட்டின் காரணமாக சந்தையில் தேங்காயின் விலை அதிகரித்துள்ளது. இதற்குத் தீர்வு காணும் வகையில் தேங்காயை இறக்குமதி செய்வது தொடர்பாக கூட்டுறவு வர்த்தக அமைச்சு ஆலோசித்து வருவதாக அமைச்சு தெரிவித்துள்ளது.


இந்தியாவின் கேரளாவிலிருந்து தேங்காய் இறக்குமதி செய்வது தொடர்பாகவும் தரமான தேங்காயை இறக்குமதி செய்வது தொடர்பாகவும் அமைச்சு ஆராய்ந்து வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

என்றுமில்லாதவாறு தேங்காயின் விலை சுமார்65 ரூபா வரையில் சந்தையில் விற்பனை செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது.

தேங்காய் உற்பத்தி அதிகளவில் காணப்படும் தெங்கு முக்கோண பகுதியாக கூறப்படும் சிலாபம், புத்தளம், குருணாகல் பகுதிகளிலும் தரமான தேங்காயின் விலை 50 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகிறது. (ஸ்ரீ-4)

## மன்னாரில் மீன்பிடி வலைக்குள் சிக்கிய இராட்சத கடற் பன்றிகள்

(கொழும்பு)



மன்னார் - தலைமன்னார் பிரதான வீதியின் வங்காலைப்பாடு கடற்பகுதியில் கடற்தொழிலுக்குச் சென்ற மீனவர் ஒருவரின் வலைத் தொகுதியில் இராட்சத கடற்பன்றிகள் சிக்கி உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளன.

கடற்பன்றிகளைக் கரைக்குக் கொண்டு வந்துள்ளதாக கடற்படையினர் மன்னார் பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து பொலிஸார் அவ்விடத்துக்கு விரைந்துள்ளனர்.

பன்றிகளை கரைக்குக் கொண்டு வந்த மீனவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு எதிர்வரும் 23ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மீட்கப்பட்ட பன்றிகள் பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இவை மன்னார் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த போது ஆயிரக்கணக்கான பொதுமக்கள் அவற்றைப் பார்வையிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சட்டவிரோத நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாவலர் மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. இதில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நந்தன விஜயரத்தின உரையாற்றுவதையும், யாழ்.மாவட்டத்திலுள்ள சகல கிராமசேவையாளர்கள் மற்றும் அவர்களின் பிரிவில் உள்ள பொதுமக்கள் ஐவர் கொண்ட குழுவினர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-எஸ்.கரன்)

# தமிழ் அரசியல்வாதிகளே பிரச்சினையைத் தூண்டிவிட்டனர்

## எல்லாவல மேதானந்த தேரர் சாட்சியம்

(கொழும்பு)

சிங்கள, தமிழ் மக்களிடையே பிரச்சினையைத் தூண்டிவிட்டவர்கள் தமிழ் அரசியல்வாதிகளே என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜாதிக ஹெல உறுமயவின் முன்னாள் தலைவருமான எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்தார்.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் கொழும்பு அமர்வில் சாட்சியமளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து சாட்சியமளித்த அவர்,

தற்போது சிங்கள அரசியல்வாதிகள் தமிழர்களுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் கூடப் பேசுவதில்லை.ஆனால் தமிழ் அரசியல்வாதிகளே சிங்களவர்களுக்கு எதிராகப் பேசுகின்றனர்.

முல்லைத்தீவு, மன்னார், மாங்குளம், திருகோணமலை, மட்டக்களப்பு உட்பட வடக்கு, கிழக்குப் பகுதியில் வாழ்ந்த சிங்களவர்கள் பயங்கரவாதத்தின் காரணமாக விரட்டியடிக்கப்பட்டனர்.

இவர்களின் மீள்குடியேற்றம் தொடர்பில் யாரும் பேசுவதில்லை. எல்லோரும் தமிழ், முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் தொடர்பிலேயே பேசுகின்றனர்.இதனால் சிங்கள மக்கள் புறக்கணிக்கப்படுகின்றனர்.

கல்வியை எடுத்துக் கொண்டால் 17 இலட்சம் சனத்தொகையை கொண்ட கொழும்பு மாவட்டத்தில் க.பொ.த உயர்தரம் கற்பதற்கு 32 பாடசாலைகள் உள்ளன.

இதேவேளை 4 இலட்சத்து 92 ஆயிரம் சனத்தொகையை கொண்ட யாழ். மாவட்டத்தில் க.பொ.த உயர்தரம் கற்பதற்கு 33 பாடசாலைகள் காணப்படுகின்றன.

நாட்டில் இடம்பெற்ற அனைத்து அநீதிகளுக்கும் பிரபாகரனின் பயங்கரவாதமே காரணமாகும்.ஏதாவது குற்றங்கள் இடம்பெற்றிருந்தால் அது பிரபாகரனாலேயே மேற்கொள்ளப்பட்டிருக்கும்.

சிங்கள பௌத்த கலாசாரம் மற்றும் சிங்கள மொழிக்கு 2 ஆயிரத்து 500 வருடகால வரலாறு உண்டு. இதை நிரூபிப்பதற்கு எழுத்து மூல ஆவணங்கள் உண்டு.

நான் இங்கு வரலாறுகளையே பேசுகின்றேனே தவிர தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிராகப் பேசவில்லை.

இலங்கையில் பொருளாதார அபிவிருத்தி மற்றும் கலாசார செயற்பாடுகளை சிங்கள மன்னர்களே மேற்கொண்டார்கள். குளங்கள் கட்டியது கூட சிங்கள மன்னர்களே.

இலங்கையை ஆண்ட ஆரியச் சக்கரவர்த்தி தமிழர் என பிரபாகரன் தெரிவித்திருந்தார்.அது முற்றிலும் பொய்யாகும்.

பொலனறுவை இராச்சியத்தின் பின்னரே வடபகுதிக்கு தமிழர்கள் சென்றனர்.எனினும் அங்கு சுயாதீன அரசு இருக்கவில்லை.

வன்னி என்பது ஒரு சிங்களச் சொல்லாகும்.முன்னொரு காலத்தில் இது காடாக இருந்தது.இப்பகுதியைச் சிங்கள மன்னர்கள் புனர்நிர்மாணம் செய்தனர்.

பிரபாகரனால் யாழ்ப்பாணத்தில் கொல்லப்பட்ட இராணுவத்தினரின் சடலங்கள் கொழும்புக்கு கொண்டு வரப்பட்டதனாலேயே 1983 ஆம் ஆண்டு கலவரம் ஏற்பட்டது.

இக் கலவரத்தை உண்டு பண்ணியவர்கள் அரசியல்வாதிகளே. சிங்கள மக்களிற்கும் இதற்கும் தொடர்பில்லை.இதற்கு முழுப் பொறுப்பும் பிரபாகரனேயாகும்.

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் உள்ள பௌத்த மத வழிபாட்டுத் தலங்களை மீண்டும் செயற்படுத்தவும் விடுதலைப் புலிகளால் உடைக்கப்பட்ட பௌத்தமத வழிபாட்டுத் தலங்களை புனர்நிர்மாணம் செய்து மீண்டும் இயங்க ஆவன செய்யுமாறு கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவிடம் கேட்டுக் கொள்கின்றேன்.

இங்கு பேசிய விடயங்கள் அனைத்தும் எனது ஆராய்ச்சியின் மூலம் பெற்ற விடயங்களே தவிர பிழையான எண்ணக்கருக்கள் அல்ல. இங்கு எந்தவொரு சமூகத்திற்கு எதிராகவும் பேசவுமில்லை என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் எல்லாவல மேதானந்த தேரர் தனது ஆராய்ச்சியின் போது பிடிக்கப்பட்ட சில புகைப்படங்களையும் தான் எழுதிய புத்தகங்களையும் ஆணைக் குழுவிடம் சமர்ப்பித்தார். (ச-5)

# பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கோவிற்கடவை சனசமூக நிலையத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆலய மண்டபத்தில் சனசமூக நிலைய முன்பள்ளி இணைப்பாளர் ச. உருத்திரகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண மின்பொறியியலாளர் க.லிங்கரூபன், பருத்தித்துறை பிரதேச சபை செயலர் ச.சந்திரயோகன், கரவெட்டி கமநல சேவை பெரும்பாக உத்தியோகத்தர் திருமதி வி. தனபாலசிங்கம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இப் பரிசளிப்பு விழாவில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கோவிற்கடவை சனசமூக நிலையம் அழைப்பு விடுத்துள்ளது. (ஸ்ரீ-4)




# எங்கள் பிரச்சினைக்கு தீர்வு காணுங்கள்

பாடசாலை மாணவர்களாகிய நாங்கள் தொண்டைமானாறு, காட்டுப்புலம், மயிலியதனை, கெருடாவில், ஊரிக்காடு,கொம்மாந்தறை, கம்பர்மலை, நாவலடி, ஆலடி போன்ற இடங்களிலிருந்து பருத்தித்துறையில் உள்ள ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ்த உயர்தரப் பாடசாலை, வட இந்து மகளிர் கல்லூரி, வேலாயுதம் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்குச் சென்று கல்வி பயின்று வருகின்றோம்.

எங்களுக்கென பருத்தித்துறை கடற்கரை வழியாக பாடசாலை பேருந்து சேவையொன்று இடம்பெற்றுவருகின்றது. அந்தச் சேவையில் கடந்த காலங்களில் பல சீரற்ற, ஒழுங்கீனமான செயற்பாடுகள் காணப்படுகின்றன.

- முன்னறிவிப்பின்றி பேருந்து சேவையை நிறுத்துவது.
- காலதாமதமாக பேருந்து சேவையில் ஈடுபடுவது
- பாடசாலை விட்டு மாணவர் வெளியே வர முன்னர் பேருந்து சென்றுவிடுவது (வட இந்து மாணவர் பிரச்சினை இது)

இதனால் நாம்

1.நேர காலத்துடன் பாடசாலைக்குப் போகமுடியாமை.

2. காலைப் பிரார்த்தனை, உடற்பயிற்சி, முதலாம் பாடவேளை என்பவற்றில் பங்கெடுக்க முடியாமை ஆகிய பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றோம்.

எங்களுக்கென இடம்பெறும் ஒரேயொரு பாடசாலை பேருந்து சேவை இதுதான். மாற்றுவழி ஏது?

குறிப்பாக கடந்த 10 ஆம் திகதி அன்று பாடசாலை விடுமுறை நாள். பாடசாலை விட முன்பே (2.00 மணிக்கு முன்) வட இந்துக்கல்லூரி வாசலைவிட்டு பேருந்து கடந்துவிட்டது. மாணவ, மாணவிகள் வீடு வந்து சேர மாலை 4 மணியாகிவிட்டது.

இதற்கான மாற்று நடவடிக்கையாக பாடசாலை பேருந்துசேவையானது காலை 7 மணிக்கு தொண்டைமானாற்றிலிருந்து புறப்படல் வேண்டும். பின்னர் பிற்பகல் 1.50 மணியளவில் புறப்பட்டு வேலாயுதம் பாடசாலை, வடஇந்து, ஹாட்லி, மெதடிஸ்ற் வழியாக தொண்டைமானாற்றை அடையலாம்.

கோவில் திருவிழா, தேர், தீர்த்தம், கந்தசஷ்டி போன்ற காரணங்களைக் காட்டி எமது பேருந்தின் சேவையை நிறுத்தவேண்டாம்.

பாதிக்கப்பட்ட மாணவ, மாணவிகள்

# வெலிக்கடைச் சிறையில் உள்ள புலிச் சந்தேக நபர்கள் பிரித்தானிய ஊடகத்துடன் தொடர்பு கொண்டனரா?

## விசாரணைகள் ஆரம்பம்

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைச்சாலையில் உள்ள விடுதலைப்புலி சந்தேக நபர்கள் லண்டனுக்கு தொடர்புகொள்வதற்காக கையடக்கத் தொலைபேசி வழங்கப்பட்ட சம்பவம் குறித்து அரசாங்க புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக திவயின பத்திரிகை தெரிவித்துள்ளது.

இவர்கள் இலங்கைக்கு எதிராக போர்க் குற்றங்களை சுமத்தி வரும் ஊடகம் ஒன்றுடன் தொடர்பு கொண்டுள் ளதாக உறுதிப் படுத்தப்பட்டுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.பொலிஸார் தம்மைசித்திரவதைக்கு உள்ளாக்கியதாக புலிச் சந்தேக நபர்கள் அந்த ஊடகத் திடம் தெரிவித் துள்ளனர்.

சந்தேக நபர்களின் தொலைபேசி உரையாடலை சம்பந்தப்பட்ட ஊடக நிறுவனம் ஒளிபரப்பியுள்ளதாக தெரியவந்துள்ளது. இந்தச் சம்பவம் குறித்து பாதுகாப்பு அமைச்சு கவனம் செலுத்தி வருவதாகவும் குறித்த பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)




ஈழத்து சிதம்பரத்தான் திருவடிக்கு
இன்று (18.12.2010) 6ஆம் நாள் உற்சவம்
(திருவெம்பாவை)

எங்களுக்கோர் தீர்வு தா ஈழத்து சிதம்பரனே

ஈழத்து சிதம் பர சௌந்தராம்பிகை சுந்தரேசனே!
இந்த நாட்டு மக்களின் நலன் காக்க வேண்டுமையா
தில்லைப் பெருமன்றில் திருநடனம் புரிபவனே
தீர்வு தந்து எமை இங்கு ஆள வேண்டுமையா
முல்லை மலர்போல முத்தமிழைப் பூப்பவனே
அல்லல் ஒழித்திங்கே அன்பு செய்ய வேண்டுமையா
எல்லை மீறும் துயரறுத்து காத்தருளும் சங்கரனே
எங்களுக்கோர் தீர்வு தந்து ஆண்டருள வேண்டுமையா

மதுரகவி.காரை.எம்.பி.அருளானந்தன்.

(#-1809)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோதமான முறையில் கைது செய்து தடுத்து வைக்கப்பட்டிருந்த நபருக்கு நட்டஈடு

பொலிஸாரினால் சட்டவிரோதமான முறையில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த நபர் ஒருவருக்கு நட்ட ஈடு வழங்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சட்டவிரேதமான முறையில் கைது செய்து ஐந்து நாட்கள் தம்மை தடுத்து வைத்திருந்ததாக தெரிவித்து குறித்த நபர் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

ரொஹான் மகேஷ் என்பவரே இவ்வாறு அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார். மனிதாபிமானமற்ற முறையில் பொலிஸார் தம்மை தாக்கியதாகவும் அதற்கு நட்ட ஈடாக 5 இலட்சம் வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.

குறித்த மனுவை பரிசீலனை செய்த நீதிமன்றம் 80 ஆயிரம் ரூபா நட்ட ஈடாகவும் 20 ஆயிரம் ரூபா சட்டச் செலவாகவும் வழங்குமாறு உத்தரவிட்டுள்ளது.

வெலிக்கடை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பொலிஸ் உப பரிசோதகர், பொலிஸ்மா அதிபர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் இந்த மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-2)

# தற்போதுள்ள நிலைமைகளில் அரசாங்கம் தமிழர் பிரச்சினைக்குரிய தீர்வை வழங்கப்போவதில்லை

## நவசமசமாஜக் கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

எமது நாட்டில் இனி தேசிய கீதம் சிங்கள மொழியில் மட்டும் பாடப்படும் எனவும் தமிழ் மொழியில் பாடப்படமாட்டாது எனவும் அரசு எடுத்துள்ள முடிவு எமக்கு ஆச்சரியத்தை தரவில்லை.

ஏனெனில் மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் ஏற்கனவே இருக்கின்ற உரிமைகளை பறிக்குமே தவிர புதிதாக எதனையும் வழங்கமாட்டாதென சிங்கள மொழியில் தேசிய கீதம் தொடர்பான தீர்மானம் பற்றி நவசமசமாஜக் கட்சி தமது கண்டனத்தை தெரிவித்துள்ளது.

இது தொடர்பான தனது அறிக்கையில் அக்கட்சி மேலும் தெரிவித்துள்ளதாவது,

தற்போதுள்ள நிலைமை களை நோக்கில் அரசு தமிழர் தொடர்பான பிரச்சினைகளுக்கு எதுவிதமான தீர்வுகளையும் வழங்கப் போவதில்லையென்பது தெளிவாகியுள்ளது.

எனினும் அண்மையில் ஜனாதிபதியைச் சந்தித்துள்ள தமிழ்க் கூட்டமைப்பானது அச்சந்திப்பு திருப்திகரமானதாக உள்ளதாக தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அக்கட்சி தெளிவுபடுத்த வேண்டும்.

அத்துடன் சுதந்திரக் கட்சியின் உபதலைவரும் பிரதியமைச்சருமான விநாயகமூர்த்தி முரளிதரன் மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரம் தேவையில்லை என தெரிவித்ததை தொடர்ந்து மத்திய பொலிஸ் முழு அதிகாரத்துடன் செயற்படலாமெனும் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை இது தொடர்பில் தேசிய மொழிகள் சமூக நல்லிணக்கத்துக்கான அமைச்சர் வாசுதேவ நாணயக்கார எதுவும் செய்ய முடியாத நிலையிலிருப்பதாகவும் அக்கட்சியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-4)

# ஜனாதிபதித் தேர்தலில் சரத் பொன்சேகா வெற்றிபெற வேண்டுமென அமெ.விரும்பியது

## விக்கிலீக்ஸ் தகவல்

இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சி வேட்பாளர் சரத் பொன்சேகா வெற்றி பெற வேண்டுமென அமெரிக்கா விரும்பியதாக விக்கிலீக்ஸ் இணையம் புதிய தகவல்களை வெளியிட்டுள்ளது.

சரத் பொன்சேகா தேர்தலில் வெற்றியீட்டினால் இலங்கையின் அரசியல் கட்டமைப்பில் அடிப்படை மாற்றங்களை ஏற்படுத்த முடியும் என அமெரிக்கத் தூதுவர் பெட்ரிக்கா புட்டீனாஸ் தெரிவித்துள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

இந்த ஆண்டு ஜனவரி மாதம் 22 ஆம் திகதி அமெரிக்கத் தூதுவர் இதனை அறிவித்துள்ளதாக விக்கிலீக்ஸ் தெரிவித்துள்ளது. எதிர்க்கட்சி வேட்பாளர் சரத் பொன்சேகா சில சாதகமான உறுதி மொழிகளை அளித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ராஜபக்ஷ அரசாங்கத்தை விடவும் சரத் பொன்சேகாவின் புதிய அரசாங்கத்துடன் கடமையாற்றுவது சுலபமானதாக அமையும் என அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)




*1271 - குப்லாய் கான் தனது சீனப் பேரரசின் பெயரை "யுவான்" என மாற்றிக் கொண்டான்.யுவான் வம்சம் ஆரம்பமானது.

*1505 - பெல்ஜிய மன்னன் ஜோன் IX வான் ஹோர்ன் தூக்கிலிடப்பட்டான்.

*1642 - ஏபெல் டாஸ்மான் நியூசிலாந்தில் காலடி பதித்த முதலாவது ஐரோப்பியரானார்.

*1787 - நியூஜெர்சி ஐக்கிய அமெரிக்காவில் 3ஆவது மாநிலமாக இணைந்தது.

*1911 - சேர். பொன்னம்பலம் இராமநாதன் இலங்கையின் சட்டசபைக்கு தேசியப் பிரதிநிதியாகத் தெரிவானார்.

*1926 - துருக்கி கிரகோரியன் நாட்காட்டிக்கு மாறியது.

*1935 - இலங்கை சமசமாஜக் கட்சி என்ற இடதுசாரிக் கட்சி இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டது.

*1941 - ஹொங்கொங்கின் பிரித்தானிய ஆளுநர் சரணடைய மறுத்ததைத் தொடர்ந்து ஜப்பான் ஹொங்கொங் மீது படையெடுத்தது.

*1944 - இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்காவின் விமானப்படை விமானங்கள் சீனாவின் ஹன்கோவ் நகரில் ஜப்பானிய இராணுவத் தளத்தின் மீது குண்டுகளை வீசின.

*1961 - இந்தோனேசியா டச்சு நியூகினியை ஆக்கிரமித்தது.

*1966 - சனிக்கோளின் சந்திரன் எப்பி மேத்தியஸ் கண்டுபிடிக்கப்பட்டது.

*1973 - சோவியத் விண்கலம் சோயூஸ் 13 வலன்டீன் லேபெடெவ், பியோத்தர் கிளீமுக் ஆகியோருடன் விண்ணுக்கு ஏவப்பட்டது.

*1987 - லரீ வோல் தனது பேர்ள் கணனி நிரலாக்க மொழியை வெளியிட்டார்.

*1990 - இலங்கையின் திருகோணமலை இராணுவத் தளபதி லக்கி விஜயவர்த்தனா கண்ணிவெடித் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

*1997 - எச்.டி.எம்.எல் 4.0 வெளியிடப்பட்டது.

*2005 - சென்னையில் வெள்ள நிவாரணம் பெறுவதில் ஏற்பட்ட நெருக்கடியில் 42 பேர் உயிரிழந்தனர்.

### பிறப்புகள்

*1822 - ஆறுமுகநாவலர், ஈழத்தின் ஆன்மீகவாதி, தமிழ் உரை நடையின் முன்னோடி (இ. 1879)

*1856 - ஜெ.ஜெ.தாம்சன், நோபல் பரிசு பெற்ற ஆங்கில இயற்பியலாளர் (இ. 1940)

*1863 - பிரான்ஸ் பேர்டினண்ட், ஆஸ்திரியாவின் முடிக்குரிய இளவரசர் (இ. 1914)

*1878 - ஜோசப் ஸ்டாலின், சோவியத் தலைவர் (இ. 1953)

*1932 - நா.பார்த்தசாரதி, தமிழ் எழுத்தாளர் (இ. 1987)

*1946 - நெல்லை க.பேரன்,ஈழத்து எழுத்தாளர் (இ. 1991)

*1948 - ஸ்டீவன் ஸ்பில்பேர்க், அமெரிக்கத் திரைப்பட இயக்குநர்.

### இறப்புகள்

*1843 - தாமஸ் கிரஹாம், லினடொக் பிரபு, இந்தியாவுக்கான பிரித்தானிய வைசிராய் (பி. 1748)

**1999 -கொழும்பு நகரசபை முன்னரங்கில் நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தின் போது, ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மீது நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் தனது வலது கண்ணை இழந்தார்.**



# இலங்கை அகதிகள் தொடர்பில் அவுஸ்திரேலியாவுக்கு புதிய சிக்கல்

(கொழும்பு)

இலங்கை அகதிகளுக்கு வழங்கிய உறுதி மொழி தோல்வியடைந்தமையால் அவுஸ்திரேலிய அரசாங்கம் புதிய சிக்கலை எதிர்நோக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஓசியானிக் வைக்கிங் கப்பல் மூலம் அவுஸ்திரேலியா செல்ல முயற்சித்து அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் உறுதி மொழியைத் தொடர்ந்து இந்தோனேசியாவில் தரை இறங்கிய இலங்கை அகதிகள் தொடர்பிலேயே இந்த சிக்கல் ஏற்பட்டுள்ளது. குறித்த அகதிகள் குழு இந்தோனேசிய முகாமில் தடுத்து வைக்கப்பட்டதைத் தொடர்ந்து பகுதி பகுதியாக பிரித்து பல்வேறு நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

அவர்களுக்கான அகதிஅந்தஸ்து விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு மாற்று நாடுகளில் குடியேற்றம் செய்வதாக அவுஸ்திரேலிய அரசாங்கம் அவர்களுக்கு உறுதியளித்திருந்தது.

இதன்படி ஓசியானிக் வைக்கிங் கப்பலில் இருந்து இரண்டு சிறுவர்கள் அடங்கலாக 17 பேர் உரோமானியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

அவர்களுக்கு அகதி அந்தஸ்து வழங்கும் நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ள பின்னரும் அவர்களை கனடா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகள் பாதுகாப்பு காரணங்களுக்காக ஏற்கமறுத்துள்ளன.

இந்த நிலையில் அவர்களைத் தொடர்ந்து உரோமானியாவில் தங்கவைக்க முடியாத நிலை காணப்படுகிறது.

எனவே அவர்களை அவுஸ்திரேலியாவுக்கு அழைத்து வந்து முகாமில் தங்க வைக்க அவுஸ்திரேலிய அரசாங்கம் முயற்சித்து வருவதாக த சண்டே மோர்னிங் ஹெறால்ட் என்ற பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

எனினும் இலங்கை அகதிகள் மீண்டும் தடுத்து வைக்கப்படுவார்களாக இருந்தால் தாம் அவுஸ்திரேலியாவுக்கு திரும்பி வரப் போவதில்லை என தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது.

கிறிஸ்மஸ் தீவில் அகதிகளுக்கான வசதிகள் போதாத நிலையில் தங்களால் அங்கு தங்கி இருக்க முடியாது எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை அவர்கள் அனைவரும் நேர்மையான அகதிகள் என உறுதியாகியுள்ள நிலையில் அவர்களை பலவந்தமாக இலங்கைக்கு திருப்பி அனுப்பவும் முடியாத நிலை அவுஸ்திரேலியாவுக்கு காணப்படுகிறது. இந்த நிலையில் அவர்கள் அவுஸ்திரேலியாவில் குடியேற்றம் செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# புலிகளுக்கு ஆயுதம் வழங்கிய குற்றச்சாட்டில் கைதான நபருக்கு 5 வருட கடூழியச் சிறை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கு ஆயுதங்களை விநியோகிக்க முயன்றார் என்கிற வழக்கில் சிங்கப்பூர் நாட்டவரான பால்ராஜ் நாயுடு (வயது-48) என்பவருக்கு அமெரிக்காவின் பல்ரிமோர் மாவட்ட நீதிமன்றம் நேற்று முன்தினம் ஐந்துவருட கடூழியச் சிறைத்தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தது.

புலிகள் இயக்கத்துக்காக மேரிலாண்ட் மாவட்டத்தில் 2006 ஆம் ஆண்டு 9 இலட்சம் அமெரிக்க டொலருக்கு ஆயுதங்கள் வாங்க முயன்றதாக இவர் கடந்த ஒக்டோபர் மாதம் குற்றவாளியாகக் காணப்பட்டு இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடை, அலுவலக ஊழியர் சட்டத்தின் கீழ்

# ஊழியர்களதும் தொழில் வழங்குநர்களதும் உரித்துக்கள், கடப்பாடுகள், பொறுப்புக்கள்

③

*4. நியமனக் கடிதம் வழங்கல்*

இது தொழில் நிபந்தனைகள் அடங்கிய ஒரு உடன் படிக்கையாகும்.நியமனக் கடிதம் வழங்குவதன் மூலம் ஊழியர்களின் அடிப் படை உரிமைகள் பாதுகாக்கப்படுவதோடு சட்டத்தினால் உறுதிப்படுத்தப்படுகிறது.இதில் இடம்பெறவேண்டிய அம்சங்கள்.

- ஊழியரின் பெயர் பதவி, அந்தஸ்து
- நியமனத் திகதி
- நியமிக்கப்படும் தரம்
- ஆரம்பச் சம்பளமும், ஏற்றங்கள், உச்ச எல்லைகள்
- சம்பளம் வழங்கப்படும் விதமும், கால எல்லையும்
- படிகள்

சோதனைக்காலம், பயிற்சிக்காலம் ஏதுமிருப்பின் அவை சம்பந்தமான விபரங்கள்

- வேலை நீக்கமும் காரணங்களும்
- வழமையான வேலைநேரங்கள்
- கிடைக்கக்கூடிய விடுமுறைகள்,லீவுகள்
- மேலதிக நேர வேலைக்கான கொடுப் பனவுகள்
- வைத்திய பரீட்சை, வினைத் திறமைக் கான தடைப்பரீட்சை என்பன
- ஒழுக்காற்று நடவடிக்கைகள்
- கழிவுகள்
- சமூகப் பாதுகாப்பு நிதியத்திற்கான
- உதவுத் தொகைகள், அறவீடு
- பதவி உயர்வுகள் மற்றும் வசதிகள்

நியமனக் கடிதம் இரு பிரதிகளில் ஊழிய ருக்கு வழங்கப்பட்டு தன் ஒரு பிரதி ஊழிய ரால் ஏற்றுக்கொண்டமையை உறுதிப்படுத் தும் அவரின் ஒப்பம் பெறப்பட்டு தொழில் வழங்குநரிடம் கையளிக்கப்படல் வேண்டும்.

*5. நலனோம்பு வசதிகள்*

ஊழியர்களின் சுகாதார உடல் நல வசதிகளைக்கருத்தில் கொண்டு விசேட சட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆண்/ பெண் இருபாலாருக்கும் வேறான மலசலகூட வசதிகள் ,கழுவும் இட வசதிகள் ,வெளிச்சம் காற்றோட்டம் தொடர்பான வசதிகள் ,பெண் ஊழியர்களுக்கான ஆசன வசதிகள் என்பன இவற்றுள் அடங்கும்.

**சட்டநிர்வாகமும் தொழிற் பரிசோதனையும்**

தொழில் ஆணையாளர் நாயகம் அல் லது அவரின் அங்கீகரிக்கப்பட்ட உத்தி யோகத்தர் சட்டத்தை நிர்வகிக்கும் தத்துவம் கொண்டுள்ளார்.இவ்வலுவலர் கடை அல்லது அலுவலகத்தினுள் பகலிலோ அல்லது இரவி லோ நியாயமான எல்லா நேரங்களிலும் உட்பிரவேசித்து பரிசோதனை செய்யலாம். சட்ட ஏற்பாடுகள் இணங்கி ஒழுகப்படுகின்ற மையை உறுதிப்படுத்தும் பொருட்டு ஏதே னும் இடாப்பை அல்லது பதிவேட்டை அல் லது ஆவணத்தை பரிசோதனை செய்யும் அதிகாரமும் இவர்களுக்கு உண்டு. அவர் களுக்கு இடையூறு விளைவிப்பது கடை அலுவலக ஊழியர் சட்டத்தின் கீழ் தண் டிக்கப்படக்கூடிய குற்றமாகும்.

**ஒரே பார்வையில் தொழில் வழங்குநர், தொழிலாளர்களின் பொறுப்புக்களும் கடமைகளும்**

*தொழிலாளர்களின் பொறுப்புகளும் கடமைகளும்*

1) சேவை ஒப்பந்தத்திற்கு (நியமனக்கடி தத்திற்கு) இணங்க நடந்து கொள்ளுதல் வேண்டும் .

2) பொதுவாக நிலவுகின்ற சட்டப்பிரமா ணங்களுக்கு இணங்க நடந்து கொள்ளுதல் வேண்டும்.

3) அனுமதிக்கப்பட்ட விடுமுறை தவிர தினந்தோறும் தொழிலுக்கு சமுகமளிக்க வேண்டும்.

4)குறிப்பிட்ட நேரத்துக்குமுன்பே தொழி லுக்குச் சமுகமளிக்க வேண்டும்.

5)மிகவும் உற்சாகமான கவனத்துடன் கடமையில் ஈடுபடுதல் வேண்டும்.

6)உற்சாகத்துடனும் பொறுப்புடனும் கடமைகள் நிறைவேற்றுதல் வேண்டும்.

7) தொழில் வழங்குநரின் அல்லது அவரின் பிரதிநிதியின் பண்புகளுக்கமைய நடந்து கொள்ளுதல் வேண்டும்

8)தொழில் வழங்குநரின் சொத்துக் களை திருடக்கூடாது .

9)தொழில் வழங்குநருக்கு நேர்மை யான விதத்தில் சேவை செய்தல் வேண்டும்.

10) சேவையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் வேளையில் சேவை நிலையத்தினுள் மது போதையில் இருக்கக்கூடாது.

11) அறிந்துகொண்டு வேண்டுமென்றே ஒழுங்கு தவறி நடத்தல்கூடாது.

12) நுகர்வோருடன் அல்லது வாடிக்கை யாளருடன் ஒழுங்கீனமாக நடந்து கொள்ளக் கூடாது.

13) ஸ்தாபனத்துக்கு அல்லது உரிமை யாளருக்கு அபகீர்த்தி ஏற்படும் வகையில் கருத்துக்களை வெளியிடுதலோ அல்லது நடந்துகொள்ளுதலோ கூடாது.

14) தொழில் தருநருக்கு வஞ்சனை எண்ணத்துடன் விபரங்களைச் சமர்ப்பிக் காது விடுதல் கூடாது.

15) தொழில் வழங்குநரின் அனுமதி யைப் பெற்றுக்கொள்ளாது ஸ்தாபனத்தின் பிரசுரங்களை வெளியிடுதல் கூடாது.

16) வேலைத்தலத்தின் சுகாதாரம், சுத்தத் தினை பேணுவதற்குத் தவறக்கூடாது.

17) ஸ்தாபனத்தில் அமைதியைப் பேணு வதற்கு ஒத்துழைக்க வேண்டும் . நாசகாரச் செயல்களில் ஈடுபடக்கூடாது.

18)புகைத்தல் தடை செய்யப்பட்டிருப்பின் அவ்விடத்தில் அதற்குத் தகுந்த விதமாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

19) ஸ்தாபனத்தின் உற்பத்திக்கு அல்லது சேவைக்கு ஊறுவிளைவிக்கும் வண்ணம் நடந்து கொள்ளுதலோ குறைக்கும் வண்ணம் நடந்துகொள்ளுதலோ அல்லது அத்த கைய செயல்களுக்கு துணைபோதலோ கூடாது.

20) தொழில் வழங்குநரால் வழங்கப் பட்டுள்ள பாதுகாப்பு உபகரணங்களை தொழிலாளர் எல்லோரும் பயன்படுத்துதல் வேண்டும்.

21) சட்டத்திற்கு முரணான விதத்தில் வேலை நிறுத்தங்களை ஒழுங்கு செய்தலோ உற்சாக மூட்டுதலோ அல்லது நடத்துதலோ கூடாது.

**க.கனகேஸ்வரன்**
உதவித்தொழில் ஆணையாளர்
மாவட்டத்தொழில் அலுவலகம் - யாழ்ப்பாணம்

22)தொழில் நியாய சபைகளின் தீர்ப்பு கள்,கைத்தொழில் நீதிமன்றுகளின் தீர்ப்புக் கள் என்பவற்றை மாற்றுமாறு கோரி நடவடிக் கைகளில் ஈடுபடக்கூடாது.

23) விசுவாசமாகவும் திறமையாகவும் சேவைகளை வழங்க வேண்டும்.

24) தொழில் பிணக்குகள் ஏற்படுமிடத்து தொழில் திணைக்களத்தை நாடி உரிய ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(தொடரும்)

# இலத்திரனியல் ஊடகங்களில் ஒளி, ஒலிபரப்பாகும் பாடல்களுக்கு கட்டணம் செலுத்த வேண்டும்

## அமைச்சரவை தீர்மானம்

(கொழும்பு)

இலங்கையில் இயங்கும் இலத்திரனி யல் ஊடகங்கள், தாம் ஒளி , ஒலிபரப்பாக் கும் ஒவ்வொரு பாடல்களுக்கும் கட்டணங் களை செலுத்தவேண்டும் என அமைச் சரவை தீர்மானம் எடுத்துள்ளது.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்றபோது அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்படி பாடகர்கள், பாடலாசிரியர்கள், இசையமைப்பாளர்கள் ஆகியோருக்கு அவர்களின் பாடல்கள் ஒளி, ஒலிபரப்பாகும் நேரங்களில் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும்.

இதற்கான தீர்மானம், புலமைசார் சொத் துடைமைசட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டுள் ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்மூலம், கலைஞர்களின் உரிமை கள் பாதுகாக்கப்படுவதாக அவர் தெரிவித் துள்ளார்.

இதன்படி, வானொலிகளில் ஒலிபரப் பாகும் ஒவ்வொரு பாடல்களுக்கும் அந்தப் பாடல்களின் பாடகர்கள், பாடலாசிரியர்கள், இசையமைப்பாளர்கள்,தலா 3 ரூபாய்களை பெறுவர்.

தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பாகும் பாடல்களுக்கு தலா 10 ரூபா செலுத்தப்பட வேண்டும். (ஸ்ரீ-4)

# மதுபான நிறுவனத்திற்கு 10 கோடி ரூபா அபராதம்

(கொழும்பு)

ஹங்வெல்லயிலுள்ள மதுபான உற் பத்தி நிறுவனமொன்றுக்கு கலால் திணைக் களம் நேற்று முன்தினம் 10 கோடி ரூபா அபராதம் விதித்துள்ளது.

10 கோடி ரூபா வரி மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரிலேயே இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இதுவரை விதிக்கப்பட்ட ஆகக்கூடுதலான அபராதத் தொகை இது வெனக் கருதப்படுகிறது.

பெருமளவு மதுபானத்தை கையிருப் பில் வைத்திருந்தபோதிலும், வரி அறவிடப் படுவதை குறைப்பதற்காக சொற்ப அளவு மதுபானமே கையிருப்பிலுள்ளதாக இந் நிறுவனம் காட்டியதாக கலால் திணைக்கள அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இந்நிறுவனம் அபராதத் தொகையில் 5 கோடி ரூபாவை செலுத்தியுள்ளது.எஞ்சிய தொகையை செலுத்துவதற்கு இருவார கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சத்தியசாயி சேவா நிலை யத்தில் திருவாசக முற்றோதல் இன்று சனிக் கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி நண்பகல் 2மணியுடன் நிறைவடையவுள் ளது. (ஸ்ரீ)





*சிவசுப்பிரமணியக் குருக்கள் அறக்கொடை நிதியம் யாழ்.மத்திய கல்லூரியில் இவ்வருடம் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை யில் சித்திபெற்ற மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை அண் மையில் வழங்கியது.யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெற்ற இந் நிகழ்வில் அறக்கொடை நிதிய ஸ்தாபகர் சிவஸ்ரீ.சிவ கமல்ராஜ் குருக்கள் உரையாற்றுவதையும் தயான் கட்டடப்பொருள் விநியோ கஸ்தரும் நியூராம் கட்டட ஒப்பந்தக் காரருமான க.பற்குணராசா மாண வருக்கு கற்றல் உபகரணம் வழங்கு வதையும் படங்களில் காணலாம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்கழி மாத இராசி பலன்கள்



## சிங்கம்

*(மகம், பூரம், உத்தரம் முதலாம் பாதம்)*

***தனக்கென்று வகுத்த பகுதியில் கடைசி வரை பயணத்தை மேற்கொள்ளும் சிங்க இராசி நேயர்களே!***

சுதந்திரமான உணர்ச்சிகளுக்கு சொந்தக் காரர்களாக விளங்குவீர்கள். கட்டுக் கோப்புகள் இருப்பது உங்களுக்கு பிடிக்காது. அரசியல் ஆனாலும், சரி, ஆன்மீகமானாலும் சரி எல்லாவற்றையும் அறிந்து வைத்திருப்பீர்கள். தேவையான நேரத்தில் தேவையானதை எடுத்துச் சொல்லும் பொழுது மற்றவர்களை வியப்படைய வைப்பீர்கள்.

மார்கழி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, இராசிநாதன் சூரியன் 4, 9 க்கு அதிபதியான செவ்வாயுடன் இணைந்து குரு வீட்டில் சஞ்சரிப்பதால், எண்ணங்கள் யாவும் நிறைவேறும். எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி காண்பீர்கள். பொன், பொருட்களைக் காட்டிலும், பூமி வாங்குவதில் ஆர்வம் கூடும்.

மாதத் தொடக்கத்திலேயே அஷ்டமத்தில் குருவும் சந்திரனும் இணைந்து, குருசந்திர யோகத்தையும், விபரீத ராஜயோகத்தையும் செயற்படுத்துகிறார்கள். எனவே, கடந்த மாதத்தில் நடைபெறாத சில காரியங்கள் திடீர் திடீரென நடைபெற்று ஆச்சரியத்தை உருவாக்கும். தெய்வீகப் பயணங்களை மேற்கொள்ள அழைப்புகள் வந்து சேரும். ஏழரைச்சனியின் ஆதிக்கமும் இப்பொழுது இருப்பதால், காக வாகனத்தானை வழிபடுவது நல்லது. தேக நலன் சீராக, குரு வழிபாட்டையும் முறையாக மேற்கொள்வது நல்லது.

**உடன் பிறப்புகள் ஒத்துவரும் நேரம்**

மூன்றாமிடமான சகோதர ஸ்தானத்தில் மாதத் தொடக்கத்தில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். ஜனவரி மாதம் முதலாம் திகதி சுக ஸ்தானம் எனப்படும் நான்காமிடத்திலுள்ள புதனுடன் கூடியிருக்கப் போகிறார். எனவே, புத- சுக்ர யோகம் செயற்படப் போகிறது. அது மட்டுமல்ல, பத்துக்கு அதிபதியாகவும் சுக்ரன் விளங்குவதால், உடன் பிறப்புகளால் ஏற்பட்ட மனக் கசப்புகள் மாறும். சகோதரர்கள் உங்கள் சங்கடங்களைத் தீர்க்க முன்வருவர். இட மாற்றம், ஊர்மாற்றம் சம்பந்தமாக எழுந்த பிரச்சினை இனி மாறும். கடன் கொடுத்தவர்கள் உங்களை திரும்பிக் கேட்டால் என்ன செய்வது என்று கவலைப்பட்ட உங்களுக்கு இப்பொழுது விடிவு காலம் பிறப்பிக்கப் போகிறது.

**உச்ச செவ்வாயின் ஆதிக்க காலம்**

ஜனவரி மாதம் 6 ஆம் திகதி மகர இராசியில் செவ்வாய் உச்சம் பெறப்போகிறார். இதன் விளைவாக, சொத்து சேர்க்கைக்கு அத்திவாரமிடப் போகிறீர்கள். பதிவான நிலத்தில் ஏற்பட்ட பிரச்சினைகள் மாறும். தந்தை வழியில் எதிர்பார்த்த படியே பாகப்பிரிவினைகள் சுமுகமாக நடைபெறும். கடிதம் மூலம் கனிந்த தகவல் வந்து சேரும். அங்காரக வழிபாடு அல்லல் தீர்க்கும்.

**பணவரவு திருப்தி தரும் நேரம்**

ஜனவரி மாதம் 7 ஆம் திகதி தனுசு இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக, பிள்ளைகளின் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். அவர்களின் கடல் பயண வாய்ப்பிற்கும், கல்வி தொடர்ச்சிக்கும் ஒத்துழைப்புச் செய்ய மறுத்தவர்கள், இப்பொழுது ஒத்துழைப்புச் செய்ய முன்வருவர்.

இம்மாதம் வியாழன் தோறும் தென்முகக் கடவுளை வழிபட்டு வருவது நல்லது. சிறப்பு பரிகாரம் செழிப்பை வழங்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் பக்கத்தில் இருப்பவர்களின் பகை மாறும். புதியவர்களின் சிநேகிதத்தால் பொருளாதார நிலை உயரும். அடுத்தவர் நலனுக்கு காட்டிய அக்கறைக்கு ஆதாயம் கிடைக்கும். கணவன்- மனைவி உறவில் நேசம் கூடும். பாசம் பொங்கும். ஐந்தில் இராகு இருப்பதால், சர்ப்ப சாந்தி செய்வது நல்லது.



## கன்னி

*(உத்தரம் 2,3,4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்)*

***வசதி, வாய்ப்புகள் பெருக வேண்டுமென்ற சிந்தனையை அதிகம் வளர்த்துக் கொண்டிருக்கும் கன்னி இராசி நேயர்களே!***

குளிர்ச்சியான உடல்வாகு பெற்றவர்கள் நீங்கள். பேச வேண்டிய இடத்தில், பேச வேண்டியதை கவர்ச்சிக்ரமாகப் பேசி காரியத்தை முடித்துவிடுவீர்கள். எதிலும் மின்னல் வேகம் காட்டாமல், மிதவைப் பேருந்து போல, மெதுவாகச் செயற்பட்டு வெற்றி காண்பீர்கள். உறுதியான கருத்துக்கள் உங்கள் மனதில் பதிந்திருப்பதால் எதிரிகளை வெல்லக் கூடிய ஆற்றல் உங்களுக்கு உண்டு. எதிர்பார்ப்புகள் உங்களுக்கு ஓரளவே இருக்கும்.

மார்கழி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மகிழ்ச்சி கூடும், மலர்ச்சி தென்படும். சகிப்பு தன்மை அதிகம் பெற்ற உங்களுக்கு, சந்தோஷங்களைச் சந்திக்கும் வாய்ப்பு அதிகரிக்கும். பொருள் இழப்புகள் இதுவரை ஏற்பட்டிருந்தாலும், குருவின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால், மாதத் தொடக்கத்தில் குருசந்திர யோகமும் செயற்படுவதால், தடைகள் விலகும். தனலாபம் சேரும். கடை திறப்பு விழாவிற்கு காத்திருப்பவர்களுக்கு அது கூட்டுத் தொழிலாக மலரும். வடை மாலை போட்டு, ஆஞ்சநேயரை வழிபாடு செய்வதன் மூலம் கவலைகள் விடை பெற்றுச் செல்லும். ஜாதக ரீதியாக தேர்ந்தெடுத்த சிறப்பு பரிகாரங்களை மேற்கொள்வதன் மூலம், சுபகாரியங்கள் வீடு தேடி வரும்.

**சுக்ர பெயர்ச்சி காலம்**

ஜனவரி மாதம் முதலாம் திகதி விருச்சிக இராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப்போகிறார். இதன் விளைவாக, சகோதர ஸ்தானம் வலுப் பெறுகிறது.உடன் பிறப்புகளிடம் இரு ந்து இது வரை உங்களுக்கு வரவேண்டிய தொகை வரவில்லையே என்ற கவலை இனி அகலும். குடும்பச் சுமைகூடும். வழக்குகளில் வெற்றி காண்பீர்கள். வாய்ப்புக்களை தேடி இதுவரை அலைந்த உங்களுக்கு ஒரு சில நல்ல வாய்ப்புகள் வரலாம். ஆனால் ஜென்மசனியின் ஆதிக்கம் இருப்பதால் அதை நீங்கள் உபயோகப்படுத்திக் கொள்ள இயலுமா? என்பது சந்தேகம் தான். செலவுகள் கூடலாம்.

**கவனத்துடன் செயற்பட வேண்டிய நேரம்**

ஜனவரி மாதம் முதலாம் திகதி மகர இராசியில் செவ்வாய் உச்சம் பெறப்போகிறார். இது அவ்வளவு நல்லதல்ல. அஷ்டமாதிபதி உச்சம் பெறும் இந்த நேரத்தில் எதிலும் கூடுதல் விழிப்புணர்ச்சி காட்டுவது நல்லது. வாகனங்களில் செல்லும் பொழுது வழியில் கவனம் தேவை. பிள்ளைகளால் பிரச்சினை உருவாகலாம். எனவே, செவ்வாய் வழிபாட்டை முறையாகச் செய்வது நல்லது.

**இடம், பூமி சேரும் நேரம்**

ஜனவரி மாதம் 7 ஆம் திகதி தனுசு இராசியில் புதன் சஞ்சரிக்கப்போகிறார்.இதன் விளைவாக பெரும் தொகை ஒன்றை செலவிடும் சூழ்நிலை உருவாகலாம். அதை இடம் வாங்குவது, நகை வாங்குவது போன்றவற்றில் உபயோகப்படுத்திக் கொண்டால் நல்லது. வீண் விரயங்களும் ஒரு சிலருக்கு உருவாகலாம். சனியின் ஆதிக்கம் இருப்பதால், பத்திரப்பதிவு செய்யும் பொழுது பார்த்து செய்வது நல்லது. தொழில் கூட்டாளிகள் மாறலாம்.

### சிவல்புரி சிங்காரம்

இம்மாதம் நந்தீஸ்வரர் வழிபாடு உங்களுக்கு நலம் சேர்க்கும். அனுமன் வழிபாடு ஆனந்தம் வழங்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் உடல் ஆரோக்கியத்தில் அக்கறை செலுத்த வேண்டிய மாதமாகும். புதிய திட்டங்களைத் தள்ளி வைப்பது நல்லது. இருப்பினும் குரு பார்வை இருப்பதால், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும். பக்கபலமாக இருப்பவர்களின் மனம் கோணாமல் நடந்து கொள்வது நல்லது. கணவன்- மனைவிக்குள் விட்டுக்கொடுத்துச் செல்வதன் மூலம் உறவு திருப்தி தரும். சனீஸ்வரர் வழிபாடு சந்தோஷம் வழங்கும். (தொடரும்)

# கனடாவிலிருந்து 20 வருடங்களின் பின் நாடு திரும்பிய தமிழர் சடலமாக மீட்பு

(கொழும்பு)

கனடாவில் இருந்து இருபது வருடங்களுக்குப் பின் நாடு திரும்பி வந்த யாழ்ப்பா ணத் தமிழர் ஒருவர் கொழும்பில் கொட்டாஞ்சேனையில் தங்கி இருந்த வீட்டின் இரண்டாவது மாடியில் தூக்கில் தொங்கிய நிலையில் நேற்றுமுன்தினம் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அ.சுரேஸ்குமார் (வயது 33) என்பவரே இறந்தவர் ஆவார். இவர் ஐந்து நாட்களுக்கு முன்தான் நாடு திரும்பி இருந்தார்.இவரது மனைவி இந்தியாவில் உள்ளார் .

இதுபடு கொலையா? தற்கொலையா ? என்கிற புலனாய்வு விசாரணைகள் கொட்டாஞ்சேனைப் பொலிஸ் நிலையப் பொலிஸார் முடுக்கி விட்டுள்ளனர். (ஸ்ரீ-2)



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது பதவிக்கால ஏற்பை முன்னிட்டு பசுமை நிறைந்த நாடு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மரநடுகை நிகழ்வு யா/ ஹாட்லிக் கல்லூரியில் கடந்த மாதம் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாடசாலையின் பிரதி அதிபர் மா.இராஜஸ்காந்தன் நிகழ்வினை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். (படம்: அல்வாய் செய்தியாளர்)

# உயர் கல்வி அமைச்சைச்சாட்டி பணம் கறக்கும் கும்பல்கள்

## விழிப்புடன் இருக்க வேண்டுகோள்

(கொழும்பு)

உயர்கல்வி அமைச்சுடன் தொடர்பிருப்பதாகக் கூறிக் கொள்ளும் குழுவொன்று வெளிநாட்டில் கல்வி கற்பதற்கான வாய்ப்பை பெற்றுத் தருவதாகக் கூறி மாணவர்களிடம் பணம் அறவிட்டு மோசடி செய்துள்ளதாக உயர்கல்வி அமைச்சு நேற்று முன்தினம் அறிவித்தது.

சம்பந்தப்பட்ட மாணவர்கள் ஒவ்வொருவரிடமும் முதலில் 7000 ரூபாவும் பின்னர் 425 அமெரிக்க டொலர்களும் அறிவிடப்பட்டுள்ளதாக தெரியவரும் அதேவேளை மோசடியாளர்கள், உயர்கல்வி அமைச்சின் முகவரியையும் அமைச்சு உயரதிகாரிகளின் போலி இறப்பர் முத்திரை என்பனவற்றை பயன்படுத்தியுள்ளதாக இவ்வமைச்சு தெரிவித்துள்ளது.

தங்காலையைச்சேர்ந்தபெண்ணொருவர் பணத்தைவங்கிக்கணக் கொன்றில் வைப்பிலிட்டு விட்டு இது குறித்து அமைச்சில் விசாரித்த போதே இம் மோசடி அம்பலமாகியுள்ளது குறிப்பிடத் தக்கது.

இம்மோசடி குழு தொடர்பாக ஏதேனும் தகவல் கிடைத்தால் 0112688776 (அமைச்சர் எஸ்.பி. திசநாயக்க) , 011269 6679 (கலாநிதி ஜயரட்ன), 0112697665 (மேலதிக செயலாளர் பி.ஜி.ஜயசிங்க), 0112688621 (மேலதிக செயலாளர் பியசேன ரனேபுர) என்ற இலக்கங்கள் மூலம் அமைச்சருக்கும் அதிகாரிகளுக்கும் அறிவிக்குமாறு அமைச்சின் செயலாளர் சுனில் ஜயந்த நவரட்ண கோரியுள்ளார் . (ஸ்ரீ-4)


## வருடாந்த பொதுக்கூட்ட அறிவித்தல்

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர் வரும் 19.12.2010 ஞாயிற்றுக்கிழமை 9 மணிக்கு சங்கத்தின் தலைவர் திரு.ந. குகானந்தராஜா அவர்கள் தலைமையில் றிம்மர் மண்டபத்தில் (வேம்படி வீதி, யாழ். பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில்) ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. தயவுசெய்து சங்க உறுப்பினர்கள் அனைவரையும் இக்கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

**வடபிராந்திய முச்சக்கர மோட்டார் ஊர்தி சேவைச்சங்கம்**

முனீஸ்வரன் வீதி,
யாழ்ப்பாணம். T.p:- 021 320 5722

(3253)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழையில் பீடைகளும் அவற்றின் முகாமைத்துவமும்



**கலாநிதி கு.மிகுந்தன்**
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

13-III

வாழைச் செய்கையாளர்களை திக்குமுக்காட வைப்பதில் பீடைகளுக்கு அதிகளவான பங்குண்டு எனப் பார்த்தோம்.அதுவும் வாழைப்பழத்துக்கான கேள்வி அதிகரித்திருக்கும் வேளையிலேயே பீடைகளின் நெருக்குவாரம் அதிகளவிலிருக்கும். சிறந்த முகாமைத்துவம் இதற்கு தீர்வாக அமையுமென்பதால் பீடைகளை அவற்றின் தன்மையை ஏற்படுத்தப்படும் சேதங்களை அவற்றினை இனங்காணுவதனை அடிப்படையாகக் கொண்டு விரிவாகப் பார்த்தால் நல்லதென்பதாலும் எங்களூர் விவசாய பெருமக்களுக்கு மிகவும் பயனுடையதாக இருக்குமென்பதாலும் விரிவாக விளக்க முற்பட்டுள்ளேன்.

### வாழையில் நீள்மூஞ்சி வண்டு

வாழையில் நீள்முஞ்சி வண்டினது தாக்கம் குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகமாகவே இருக்கும். வாழை பரவலாக செய்கை பண்ணப்படும் இடங்களில் சரியான கவனிப்பின்றி இருக்குமானால் அதில் நீள்மூஞ்சி வண்டினது சேதத்தை எவ்விதத்திலும் தவிர்க்க முடியாதிருக்கும்.

### இரு வகையான நீள்மூஞ்சி வண்டுகள்

வாழையில் இருவகையான நீள்மூச்சி வண்டுகளின் சேதத்தை அவதானிக்கலாம்.

ஒன்று வாழைக்கிழங்கு நீள்மூச்சி வண்டு (Rhizome weevil) ஆகும். இதற்கு கொஸ்மோபொலைற்றசு சொரிரிடசு ( Cosmopolites sordidus) எனப் பெயரிட்டுள்ளனர். மற்றையது வாழைத்தண்டு நீள்மூஞ்சி வண்டு (Pesudostem weevil).

இதற்கு ஒடைப்போறசு லோன்ஜிலிசு (Odoiporus Longicollis) என பெயரிட்டுள்ளனர். இரண்டும் நீள்மூஞ்சி வண்டு வகையைச் சேர்ந்தவை என்பதுடன் வருணம் கோலியொப்தீராவினுள் உள்ளடக்கப்படுகின்றன என்பதனை கவனித்தீர்களா! பூச்சி பீடைகளை சரியாக இனங்காண முடிந்தாலேயே அவற்றைப் பற்றிய விபரங்களையும் இன்னும் முகாமைத்துவப்படுத்தக் கூடிய தகவல்களையும் பெறமுடியுமாதலால் இவ்வாறான இரு சொற் பெயரீடுகள் அவசியமாகின்றன.

எமது நாட்டைப் பொறுத்த வரையில் இரண்டு வகையான நீள்மூஞ்சி வண்டுகளின் தாக்கங்களும் அதிகமென்றே கணக்கிடப்பட்டுள்ளன.


இவை நேரடியாக ஏற்படுத்தும் சேதங்கள் ஒரு பக்கமிருக்க தம்மையறியாது காவியாக தொழிற்பட்டு வாழையில் பனாமா வாடல் நோயை ஏற்படுத்தும் பூஞ்சணத்தின் தொற்று ஏற்பட உதவி செய்வதே மிகப்பெரிய சேதமாக அறியப்பட்டுள்ளது.

உட்செல்வதற்கு வாய்ப்புக் கிடைத்தால் அதனை சரியாகப் பயன்படுத்திக் கொள்ளும் வாடல் நோயை ஏற்படுத்தும் பியூசேரியம் (Fusarium) எனும் பூஞ்சணத்திற்கு தெரிந்தும் தெரியாமலும் உதவிக்கரம் நீட்டும் இவ்வாறான நீள் மூஞ்சி வண்டுகளால் வாழைச்செய்கை பெரிதும் பாதிப்பிற்குள்ளாகி யிருக்கிறது.

இதேபோல வாழையில் சேதத்தையேற்படுத்தும் விலாங்குப்புழு (Nematode) வும் இவ்வாறான பூஞ்சணத்திற்கான விரும்பியழைக்காத காவியாக இருப்பதையும் இவ்விடத்தில் கூறி வைப்பது பொருத்தமானதாகவே இருக்கும்.

ஆக மொத்தத்தில் நீள்மூஞ்சி வண்டுகளினதும் அல்லது விலாங்குப் புழுவினதும் உதவியின்றி வாடலை ஏற்படுத்தும் பியூசேரியம் எனும் அழுகல் வளரிப் பூஞ்சணம் வாழையில் நோயை உருவாக்க முடியாது என்பதனை அவதானிக்க முடிகின்றதல்லா! இதுபற்றி அவ்வப்போது விரிவாக விளக்க முற்படுகின்றேன்.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...




எங்களூர் வாழைச் செய்கையாளர்களுக்கு இந்த விடயங்கள் ஓரளவிற்கேனும் தெரிந்து வைத்திருப்பது அவர்களுக்கு என்றுமே உதவும்.

இக்கட்டுரைத் தொடரின் செய்தியை வாசித்து விளங்கமுடியவில்லை எனில் எமக்கு அறியத்தாருங்கள். இன்னும் எளிமையாக்கி உங்களுக்கு இந்த விடயங்களைத் தெரியப்படுத்த என்றுமே எழுதும் இக்கைகள் விருப்புக் கொண்டுள்ளன. எம்மினிய உறவுகளுக்கு உதவ என்றுமே தயாராக இருக்கின்றன.

நீள்மூஞ்சி வண்டுகளினால் நேரடியாகவே அவற்றினது வாயுறுப்புக்களினால் ஏற்படுத்தப்படும் தாக்கம் அல்லது சேதம் அளப்பரியது.

சிறந்த முகாமைத்துவத்தினால் இவற்றைக் கட்டுப்படுத்த முடியும். (தொடரும்)

# சிங்கள பௌத்த கலாசாரத்துக்கு அடிபணிந்தே ஏனைய சிறுபான்மை இனங்கள் வாழ வேண்டும்

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவிப்பு

(கொழும்பு )

சிங்களத்தில் மாத்திரமே தேசிய கீதம் என்ற கொள்கைக்கு இணங்காத எந்தவொரு நபருக்கும் உள்நாட்டில் இடமில்லை என தெரிவித்துள்ள தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் சிங்கள பௌத்த கலாசாரத்திற்கு அடிபணிந்தே ஏனைய சிறுபான்மை இனங்கள் வாழவேண்டும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர கூறுகையில்,

இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடு. இங்கு சிங்கள கலாசாரமும் அதன் மொழிகளுமே தேசிய கொள்கைகளாக கருதப்பட வேண்டும்.

ஏனைய சிறுபான்மை இன மக்கள் சுதந்திரமாக வாழ முடியும். ஆனால் தேசிய பௌத்த கொள்கைகளுக்கு உட்பட்டவர்களாகவே அவர்கள் வாழ வேண்டும். மேலும் தமிழில் தேசிய கீதத்தை பாடுவதற்கு கொண்டு வரப்பட்டுள்ள தடையானது வரவேற்கப்பட வேண்டியதொன்றாகும்.இதற்கு எதிர்ப்பு தெரிவித்து உள்நாட்டில் சில சக்திகளும் இந்தியா மற்றும் மேற்குலக நாடுகள் சிலவும் கருத்துக்களை வெளியிடுகின்றன.

இவர்கள் அனைவரும் ஒரு விடயத்தை நன்றாக புரிந்துகொள்ள வேண்டும். இலங்கை எந்தவொரு நாட்டிற்கும் அஞ்சாது. ஏனென்றால் சகல அதிகாரங்களையும் கொண்ட தனி சிங்கள இராச்சியமே இலங்கையாகும்.

எனவே இந்தியா உள்ளிட்ட எந்தவொரு வெளிநாடுகளின் சவால்களுக்கும் முகம் கொடுக்க நாங்கள் தயாராகவே உள்ளோம். தேசிய கீதம் விடயத்தில் யாருக்கும் தலையிட உரிமை கிடையாது. அது அரசாங்கத்தின் தீர்மானமாகும் என்றார். (ஸ்ரீ-2)




யூனியன் அஷ்யூரன்ஸ் பி.எல்.சி. கம்பனியில் ஆயுள் காப்புறுதி செய்து கொண்ட மீசாலையைச் சேர்ந்த திருமதி சின்னப்பிள்ளை என்பவரின் மரண இழப்பீட்டுத் தொகைக்கான காசோலை 2 இலட்சத்து 73 ஆயிரத்து 250 ரூபாவை அவரது கணவரான சோமசுந்தரம் என்பவருக்கு விற்பனை முகாமையாளர் அ.அன்ரன் வழங்குவதையும் சக உத்தியோகத்தர்கள் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# புதிய யோகாசன தியான வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

சிவானந்த மகரிஷி யோக நிலையத்தினரால் இன்று சனிக்கிழமை காலை 6 மணிக்கு புதிய யோகாசன வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இப் பயிற்சி வகுப்பில் ஆண்கள், பெண்கள், சிறியோர், பெரியோர் என்ற வயது வேறுபாடுகள் இன்றி அனைவரும் கலந்து பயன் பெறலாம்.

அத்துடன் பயிற்சி பெறவரும் நோயாளர்களுக்கு விசேட கவனங்கள் எடுக்கப்பட்டு, அவரவர் நோய்களைக் குணப்படுத்தும் வகையில் பயிற்சிகள் தொகுத்து வழங்கப்படும் என நிலையப் பொருளாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2-9)

# இவ்வாண்டின் இறுதிக் காலாண்டில் பொருளாதார வளர்ச்சி அதிகரிப்பு

(கொழும்பு)

இவ்வாண்டின் இறுதிக்காலாண்டில் இலங்கையில் எட்டுசதவீத பொருளாதார அபிவிருத்தி ஏற்பட்டுள்ளதாக புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2009 ஆம் ஆண்டு இறுதிக்காலாண்டுப் பகுதியில் இலங்கையின் பொருளாதார மதிப்பு [illegible] பதிவாகியிருந்தது.

இவ்வாண்டின் இறுதிக்காலாண்டில் இது 690. 7ஆக அதிகரித்துள்ளதாக திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

இந்த இறுதிக்காலாண்டில் விவசாயம் 6.2 சதவீதத்தாலும் தொழிற்சாலைகள் மற்றும் சேவைகள் 8.8 வீதத்தாலும் அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்பிட்டியிலுள்ள 10 தீவுகளில் முதலிட 10 வெளிநாட்டு நிறுவனங்கள் முன்வருகை

(கொழும்பு)

இலங்கை சுற்றுலாத் துறையின் மேம்பாட்டுக்கான பல திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பிரதிப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

இவ்வருடம் இலங்கை வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 6இலட்சத்தைக் கடந்துள்ளதாகவும் அடுத்த வருடம் ஏழு இலட்சம் சுற்றுலாப் பயணிகளை எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கல்பிட்டி கடலில் உள்ள 10 தீவுகளில் முதலீடு செய்ய 10 பிரதான வெளிநாட்டு கம்பனிகள் முன்வந்துள்ளன.

இவை சுமார் 500 மில்லியன் டொலர் இலங்கையில் முதலீடு செய்ய உள்ளன.

யுத்தம் முடிவடைந்துள்ள நிலையில் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளதோடு முதலீடுகளும் அதிகரித்துள்ளன.

கல்பிட்டியில் உள்ள 14 தீவுகளில் 2இல் ஏற்கனவே, முதலீடு செய்யப்பட்டுள்ளன. 10 தீவுகளில் முதலீடு செய்ய பிரதான நிறுவனங்கள் முன்வந்துள்ளன. இங்கு ஐந்து நட்சத்திர விடுதிகள், கொல்ப் மைதானம் பொழுதுபோக்கு இடங்கள், பூங்கா என்பன அமைக்கப்படும்.



இங்கு வாழும் மக்களுக்கு எதுவித பாதிப்பும் ஏற்படாதவாறே இந்தத் தீவுகள் அபிவிருத்தி செய்யப்படும்.முதலீட்டாளர்கள் தமது மொத்த முதலீட்டில் 5 வீதத்தை இங்குள்ள மக்களில் வீடு மற்றும் வசதிகளை மேம்படுத்த செலவிட உள்ளனர்.

சர்வதேச மட்டத்தில் கேள்விப் பத்திரம் கோரியே இந்தத் தீவுகளில் முதலீடு செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.

30 முதல் 50 வருட காலத்திற்கு இவை குத்தகைக்கு வழங்கப்படும் எனபிரதி அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# வடக்கிலுள்ள சரணாலயங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன

(கொழும்பு)

வடக்குக் கிழக்குப் பகுதிகளிலுள்ள சரணாலயங்களை அபிவிருத்தி செய்வதற்கு வனஜீவராசிகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

மடு, சுண்டிக்குளம், பரதீவு, பதவியா ஆகிய பகுதிகளிலுள்ள சரணாலயங்களே இவ்வாறு அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாக கமநல சேவைகள் மற்றும் வனஜீவராசிகள் அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.

அத்துடன் பாதுகாக்கப்பட்ட காடுகளின் எல்லைகளைப் பாதுகாப்பதற்கும் நடவடிக்கை எடுப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதனைத் தவிர யானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படும் பிரதேசங்களில் மின்சார வேலிகளை அமைப்பதற்கான திட்டங்களைச் செயற்படுத்தவும் எண்ணியுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ள அதேவேளை இதற்கென400 மில்லியன் ரூபாவுக்கும் மேற்பட்ட நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார். (ஸ்ரீ-4)

# மத்திய மாகாண ஆளுநராக மீண்டும் டிக்கிரி கொப்பேகடுவ

(கொழும்பு)

மத்திய மாகாண ஆளுநராக டிக்கிரி கொப்பேகடுவ மீண்டும் நியமனம் செய் யப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னி லையில் நேற்று முன் தினம் அலரி மாளி கையில் வைத்து டிக்கிரி கொப்பேகடுவ மத்திய மாகாண ஆளுநராக பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீர துங்க உட்பட முப்படைத் தளபதிகளும் இந் நிகழ்வில் கலந்துகொண்டனர். (ஸ்ரீ-2)

# ஐ.நா. நிபுணர் குழுவின் செயற்பாடு நீடிக்கப்படலாம்



இலங்கையில் கடந்தவருடம் இறுதி யுத்தத்தின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பாக ஆலோசனை வழங்க ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனால் நியமிக்கப்பட்ட சர்வதேச நிபுணர்கள் மூவர் கொண்ட குழுவின் செயற் பாட்டுக் காலம் நீடிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இச் செயற்பாட்டுக் காலம் நேற்று முன் தினத்துடன் உத்தியோகபூர்வமாக நிறைவடைந்த நிலையில் இச் செயற்பாட்டுக் காலம் நீடிக்கப்படலாம் என ஐ.நா. செயலாளர் நாயகத்தின் பேச்சாளர்களில் ஒருவரான ஃபர்ஹான் ஹக் தெரிவித்துள்ளார்.

ஆயினும் ஐ.நாவின் உத்தியோகபூர்வ அறிவிப்பு இன்னமும் வெளிவரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)

# தேசிய கல்வித்தர வழிகாட்டல் கைநூலை பகிர்ந்தளிப்பதற்கான தேசிய மாநாடு

(அல்வாய்)

தேசிய கல்வித்தர வழிகாட்டல் கை நூலை பகிர்ந்தளித்தல் மற்றும் கல்வியின் தரத்தினை உறுதிப்படுத்துவதற்குமான தேசிய மாநாடு எதிர்வரும் 23 ஆம் திகதி காலை 10 மணிக்கு இசுறுபாய மத்திய கல்வியமைச்சின் கேட்போர் கூடத்தில் கல்வி யமைச்சர் பந்துல குணவர்த்தன தலைமையில் நடைபெறவுள்ளது.

இம் மாநாட்டில் தேசிய கல்வி ஆணைக் குழுவின் உப தலைவர் கலாநிதி சீ.வி. குண வர்த்தனவின் விசேட சிறப்புரை இடம்பெறவுள்ளது.

மேற்கூறிய கைநூல் பிரதிகள் இத்தினத் தில் பகிர்ந்தளிக்கப்பட இருப்பதனால் காலை 9 மணி தொடக்கம் 10 மணி வரையான காலப்பகுதியில் வருகை தருவோர் பதிவினை மேற்கொள்ள வேண்டும்.

மேலும் வருகையை உறுதிப்படுத்தும் முகமாக 20 ஆம் திகதி காலை 11 மணிக்கு முன்னர் மாகாணக் கல்வித் திணைக்களத் தின் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி அல்லது கல்வித் தர விருத்திக்கு பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளருக்கு தெரியப்படுத்தவும்.

எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் வலயத்திலுள்ளவர்களின் வருகையை உறுதிப்படுத்தி அத் தகவலை மாகாண இணைப்பாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

எதிர்வரும் 23 ஆம் திகதி நடைபெறும் இந்த வழிகாட்டி நூலைப் பெற சமுகமளிக்கும் அதிகாரி க.பொ.த.(சா/த) பரீட்சைக் கடமைகளில் ஈடுபட்டிருந்தால் இவ்வதிகாரிக்குப் பதிலாக இவ்வைபவத்திற்குச் சமுகமளிக்கும் அதிகாரியிடம் இக்கைநூலை விநியோகிக்குமாறு தங்களால் உறுதிப்படுத்தப்பட்ட கடித மொன்றை கொடுக்குமாறு வேண்டப்பட்டுள் ளது.

சகல பாடசாலை அதிபர்களுக்கும் அடுத்த வருடத்திற்கான கால அட்டவணையைத் தயாரிக்கும் போதும் மதிப்பீட்டாளர்களுக்கு பொறுப்பு வழங்கும் போதும் 2011 ஆம் ஆண்டு வரு டாந்தத் திட்டத்தினை தயாரித்தல் மற்றும் 2011 உள்வாரி மதிப்பீட்டினை தயாரிக்கும் போதும் பின்பற்ற வேண்டிய உபதேசங்களை வழங்குவதுடன் இந்தக் கைநூலினைப் பாடசாலைக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் பாடசாலைகளில் கல்வித் தர விருத்தியை உறுதிப்படுத்துவதற்காக அவசியமான இந்தத் தேசிய செயற்பாட்டினைப் பொறுப்புடனும் அர்ப்பணிப்புடனும் தவறாது மேற்கொள்ளுமாறு மத்திய கல்விய மைச்சின் முகாமைத்துவத்தர உறுதிப்பாட்டு அலகின் கல்விப் பணிப்பாளர் கே.எ.டி. புண்ணியதாச சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களையும் கேட்டுள்ளார். (ஸ்ரீ-3-19)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர் சின்னம்மா செல்லையா



கடந்த 19.11.2010 அன்று இறைபதம் அடைந்த எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசி மூலமும் ஆறுதல் கூறி எமது துயரில் பங்கேற்ற உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவர்க்கும் எமது உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்வதோடு நாளை (19.12.2010) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அந்தியேட்டி அழைப்பிதழ் கிடைக்கப்பெறாதவர்கள் இதனையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

70/4, ஈச்சமோட்டை றோட்,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.
T.P:- 0779113014

தகவல்:
மகன்
க.செல்லையா
(3258)



## பருத்தித்துறை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ/து) பருத்தித்துறை
## பதவி வெற்றிடம்

**பதவி :-** லொறிச்சாரதி - 312/14

**சம்பள அளவுத்திட்டம்:-** (கூட்டுறவு வேலையாளர் ஆணைக் குழுவின் 66/2006 சுற்றுநிருபத்திற்கு அமைய 312/14 ஆவது சம்பளக் குறியீடு)

9700 - 11350
80× 10 - 85× 10

**வயது :-** 18 - 45 வயதிற்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

**பிணை:-** 20,000.00 ரொக்கப்பிணையும் ரூபா 30,000.00 ஆதனப்பிணையும்

**தகைமைகள்:-** 5ஆம் வகுப்பு சான்றிதழுடன் பஸ்/ லொறிச்சாரதி அனுமதிப்பத்திரத்துடன் நான்கு வருடத்திற்குக் குறையாத தொழில் அனுபவம் உடையவராகவும் , தேகாரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

**பொது நிபந்தனைகள்:-**

01. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
02. சங்க எல்லைப்பரப்பிற்குள் வசிப்பவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
03. கூட்டுறவுச் சங்கத்தில் பணிபுரிவோர் தங்கள் விண்ணப்பங்களை சங்கத்தினூடாக அனுப்பி வைக்கவும்.
04. விண்ணப்பப்பத்திரத்தினை ரூபா 10/= செலுத்தி தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி :-** 30/12/2010

**உள்ளடக்கப்பட வேண்டிய விபரங்கள் :-**

01. பிறப்புச்சான்றிதழ் 02. கல்வித் தகைமைச்சான்றிதழ் 03.தொழில் தகைமைச் சான்றிதழ் 04. நற்சான்றுப்பத்திரங்கள் 05. சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றிற்கான பிரதிகள்.

விண்ணப்பங்கள் "தலைவர், பருத்தித்துறை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்" என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் லொறிச்சாரதிக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிட்டு நேரிலோ, தபாலிலோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

தலைவர்,
பரு.ப.நோ.கூ.சங்கம்,
01 ஆம் குறுக்குத்தெரு,
பருத்தித்துறை.

(சி-184)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த உயர்தர பரீட்சை முன்னணிப் பெறுபேறுகள்

***யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி***

**கணிதப்பிரிவு**

எஸ்.மதுஷன்-2ஏசி, பி.வரோதயன்-3பி, யு.விஜீத்-2பிசி, எஸ்.சுஜீவன்-2பிசி, கே. பாலகஜன்-பி2சி, எஸ்.கஜானன்-பி2சி, எ.அசோக்-3சி,ர.கஜமுருகன்-3சி, எம்.தனேஷன்-3சி, எல்.சஜீவன்-2சிஎஸ்.

**வர்த்தகப்பிரிவு**

ஜெ.ஜெமில்ரன்-3ஏ, எஸ்.சிவராம்-2ஏபி, ரி.ஜெனி-2ஏபி, கே.கேதரன்-ஏ2பி, பி.பிரதீபன்-ஏ2பி, ரி.கேசவன்-2ஏசி, பி.அஜந்தன்-3பி.

**உயிரியல் பிரிவு**

எ.பிரதீபன்-3பி, எஸ்.கோகுலன்-3சி.

**கலைப்பிரிவு**

இ.மயூரன்-2ஏபி, எஸ்.சஞ்சீவ்-ஏ2பி, எஸ்.தனுஜன்-ஏபிசி.

***மானிப்பாய் இந்துக்கல்லூரி***

**கணிதப் பிரிவு**

ஸ்ரீகாந்தன் சுபாங்கன்- 2 ஏ பி பத்மநாதன் கீர்த்தனன் ஏ பிசி, சிவா உதயராஜ்-சி2 எஸ்,

**உயிரியல் பிரிவு**

எலியஸ் டினேஸ்- 2 பி சி, சிவபாதம் டிசாந்- 3 சி,

**வர்த்தகப் பிரிவு**

கிருஸ்ணசாமி துளசிதரன்- ஏபிசி, ஏகாம்பரமூர்த்தி தனேஷ்- 2பிசி, ரங்கநாதன் கோகுலன்- 2 பி சி, ஸ்ரீ சந்தானராஜா கற்பகராஜ்- பி 2 சி.

**கலைப்பிரிவு**

மனோகரன் நிஷாந்தன்- 2 ஏ பி, ஜெயசுதாசன் ஜோன்சன்- 2 ஏ சி, விக்ரர் அன்ரனி- 2 ஏ சி, வெள்ளிமயில் வினோத்-ஏ2 பி, சுந்தரலிங்கம் யாதவன்- ஏபிசி, பாலசிங்கம் பாஸ்கரன்- ஏ 2 சி, மரியதாஸ் மதிசன்- ஏ2சி, சண்முகராஜா மஜித்- ஏ 2 சி, விஸ்வலிங்கம் பகீதன்- 2பிசி, ரவீந்திரன் இந்துதாஸ்-2பிசி,முருகானந்தன் வினோத்-2பிசி, குணசேகரன் தனுசன்- 2 பிசி, கனிஸ்ரநாதன் கவிராஜ் -பி2சி.

***கிளிநொச்சி வட்டக்கச்சி மகாவித்தியாலயம்***

**உயிரியல் பிரிவு**

பு.ஜோதிகா- 2ஏபி, த.தனலக்ஷி- பி2 சி,

**கணிதப்பிரிவு**

மு.தர்சிகா- பிசிஎஸ்,

**கலைப்பிரிவு**

பா.சுஜீபா- 2 ஏ பி, அ.சுகீதா- ஏ 2 பி, தே.கௌசிகன்- 2பிசி, தே.செந்தூரன்- 2 பி சி, ஜெ.டயானி- 2 பி சி, ஞா. பிரசாந்தினி-2பி சி, சி.சிவதர்சன் 2பிசி.

(ஸ்ரீ-9-30)

# வயோதிபர் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் கைது

(சாவகச்சேரி)

மந்துவில் மேற்கு கொடிகாமத்தில் நேற்று முன்தினம் காணிப்பிணக்கு காரணமாக ஏற்பட்ட சண்டையில் வயோதிபர் ஒருவர் கோடாரி மற்றும் பொல்லுகளால் தாக்கிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் கொடிகாமம் மந்துவில் பகுதியைச் சேர்ந்த வேலு சின்னத்தம்பி (வயது 60) என்பவரே கொலை செய்யப்பட்டவராவார். மேற்படி சம்பவத்துடன் தொடர்புடைய இருசந்தேக நபர்களை கொடிகாமம் பொலிஸார் கைது செய்து சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் நேற்றைய தினம் ஆஜர் செய்தனர்.

நாகரத்தினம் கர்சன், மகேந்திரன் கடோன்கசன் என்ற இருவருமே சந்தேகத்தின் பேரில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இவர்களை எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார்.

(ஸ்ரீ-3-29)

# கலந்துரையாடல்

ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கு 2011க்கான வேலைத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் கோப்பாய் கோட்டப் பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவு பகுதித்தலைவரையும் வேறொரு ஆசிரியரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார்.

(ஸ்ரீ-4)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

உயரழுத்த மின்மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகள் செய்யும் பொருட்டு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை சுன்னாகம் தெற்கு, இணுவில், உடுவில், மருதனார்மடம், தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, மானிப்பாய், சங்குவேலி, கோண்டாவில், கொட்டடி, கோம்பயன்மணல் பிரதேசம், யாழ்.பட்டணப்பகுதி ஆகிய இடங்களுக்கான மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் எனவும் வேலைகள் முன்னதாக முடிவுறுமால் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னதாக மின் விநியோகம் வழங்கப்படலாம் என இலங்கை மின்சாரசபையின் யாழ். பிரதேச மின்பொறியிலாளர் அறிவித்துள்ளார்.

(ஸ்ரீ)

# பல்கலை.பேராசிரியர்களுக்கு விசேட கௌரவப் பட்டம்

(கொழும்பு)

பல்கலைக்கழக பேராசிரியர்கள் பலர் விசேட கௌரவப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவத்தின் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இவர்களுக்கான கௌரவப் பட்டங்களை வழங்கினார்.

இலங்கை பல்கலைக்கழகங்களின் உபவேந்தர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் இந்த கௌரவப் பட்டமளிப்பு விழா நடைபெற்றது.

வாழ்நாளில் ஒருமுறை மாத்திரம் கிடைக்கக் கூடிய அதிசிறந்த ஆய்வுகளுக்கான இந்த விசேட கௌரவப் பட்டத்தை இம்முறை ஆறு புத்திஜீவிகள் பெற்றுக்கொண்டனர்.

(ஸ்ரீ-4)

# சங்கானை சூட்டுச் சம்பவத்திற்கு தென்னிந்திய திருச்சபை கண்டனம்



சங்கானை முருகமூர்த்தி ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ நித்தியானந்த குருக்களுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஏற்பட்ட வன்முறையை அறிந்து அதிர்ச்சி அடைந்துள்ளோம். சிவ ஸ்ரீ நித்தியானந்த குருக்களின் சடுதியும், துர்பாக்கியமுமான மரணத்தையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை அவரது குடும்பத்தினருக்கு தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்விதமான வன்செயலை திருச்சபை சார்பாக வன்மையாகக் கண்டிக்கின்றோம். வன்செயலுக்குக் காரணமானவர்கள் அடையாளம் காணப்பட்டு சட்டத்தின் முன்னால் நிறுத் தப்பட வேண்டும் என்றும் இச்செயல்கள் தொடர்ந்தும் நடைபெறா வண்ணம் பொறுப்பில் உள்ளவர்கள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக் கொள்கின்றோம்.

ஆத்மாசாந்தி அடைவதாக!

அதிவண.கலாநிதி.டானியல் செல்வரத்தினம் தியாகராஜா
பேராயர், தென்னிந்திய திருச்சபை,
யாழ். அத்தியட்சாதீனம், வட்டுக்கோட்டை.

# குருக்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்

சங்கானையில் இந்துக்குரு நித்தியானந்த குருக்கள் சுட்டுக்கொல்லப்பட்டமைக்கு எமது ஆழ்ந்த கவலையையும், கண்டனத்தையும் தெரிவித்துக்கொள்வதுடன் அவரது இரண்டு புத்திரர்களையும் அநியாயமாக சுட்டு படுகாயப்படுத்தியமைக்கு எமது கண்டனத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்துக் குருமாரின் மீதான அண்மையில் நிகழ்ந்த இரண்டாவது துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் இதுவாகும். இதற்கு முன்னரும் இந்துக் குருமாரின் வீடுகள் ஆயுதமுனையில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பெருகிவரும் கொலை, கொள்ளை, களவு, நிறுவனங்களின் பெயரால் அச்சுறுத்தி பணம் கோரல் போன்ற நிகழ்வுகளை முழுமையாக கட்டுப்படுத்தவும், சட்ட விரோத ஆயுதம் வைத்திருப்போரை இனங்கண்டு நடவடிக்கை எடுக்கவும், தீவிர நடவடிக்கைகளை பொலிஸாரும், இராணுவத்தினரும் எடுக்கவேண்டுமென வலியுறுத்த விரும்புகிறோம்.

சீ.வீ.கே.சிவஞானம்
கௌரவ பொருளாளர்,
இந்து அமைப்புக்களின் ஒன்றியம்

# குருக்களுக்கு ஏற்பட்ட கொடூரம் இனிமேலும் இடம்பெறக் கூடாது

குடாநாட்டில் திருட்டுச் சம்பவங்களும் இதனால் ஏற்படும் உயிரிழப்புக்களும் ஏற்படாமல் தடுக்க படையினரும், பொலிஸாரும், அரசியல் கட்சித் தலைவர்களும் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டுமென சர்வதேச இந்துக்குருமார் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது. இது தொடர்பாக ஒன்றியம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

அண்மையில் சிவஸ்ரீ நித்தியானந்தக் குருக்கள் இல்லத்தில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவமும் உயிரிழப்பும் மக்கள் மத்தியில் பெரும் பீதியை ஏற்படுத்தியுள்ளது.

இத்தகைய சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று வருவதால் வாழ்வில் நிலையற்ற தன்மையும் அவ நம்பிக்கையும் தமது பொருள் பண்டங்களை பாதுகாப்பதில் பல சிரமங்களையும் அதற்கு மேலாக தமது உயிர்களை பலிகொடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்ட நிலையில் யாழ்.மக்கள் திகழ்கின்றனர்.

குருக்களின் இல்லத்தில் நடைபெற்ற சம்பவம் ஓர் திகில் நிறைந்த படத்தின் சம்பவமாக காணப்படுகின்றது.

இத்தகைய திருட்டுச் சம்பங்களும் இதனால் ஏற்படும் உயிர்ப் பலிகளும் இனிமேலும் குடாநாட்டில் இடம்பெற இடமளிக்கக்கூடாது. இதற்குப் படையினரும் பொலிஸாரும் மக்கள் பிரதிநிதிகளாகக் காணப்படும் அரசியல் கட்சித் தலைவர்களும் உடனடியாக தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு மக்கள் உடைமைகளையும் உயிர்களையும் பாதுகாத்து அவர்கள் வாழ்வை உறுதிப்படுத்த வேண்டியது இவர்களது கடமையும் ஆகும் என சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியத்தினர் கேட்டுக்கொள்கின்றனர்.

இத்தகைய துயரச் சம்பவம் நடந்த பின்னரும் இந்தச் சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவிப்பது பற்றி எந்த அமைப்போ, தனிநபர்களோ சர்வதேச இந்து குருமார் ஒன்றியத்துடன் தொடர்பு கொள்ளவில்லை என்பதனை இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ளும் அதேவேளை அமரத்துவம் அடைந்த சிவஸ்ரீ நித்தியானந்தக் குருக்கள் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவித்துக் கொள்கின்றோம் என அச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செயலாளர்
சர்வதேச இந்துக்குருமார் ஒன்றியம்

# ஐ.நா. அமைதிப் படையில் மேலும் சில இலங்கைப் படையினர்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் அமைதி காக்கும் படையில் இணைந்து கொள்ளும் பொருட்டு 140 இலங்கை இராணுவத்தினர் நேற்று முன்தினம் லெபனான் நோக்கிப் புறப்பட்டுச் சென்றனர்.

காலாட் படையின் தொழில்நுட்பப் பிரிவைச் சேர்ந்த வீரர்களே லெபனானுக்குப் புறப்பட்டுச் சென்றதாக இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெதவெல குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இந்தக் குழுவில் 8 அதிகாரிகளும் உள்ளடங்குவதாக அவர் கூறினார். காலாட் படைக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக இராணுவத்தின் மேலும் சில பிரிவுகளைச் சேர்ந்த அதிகாரிகளும் இதில் இணைந்துள்ளதாக இராணுவப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

(ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம் பொருள் நமதேயாயின்; அறம்பொருள் பிறருக் காவதுண்டோ?

– திருவிளையாடல் புராணம்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# பரமனோ நரியைப் பரியாய்க் காட்டினான் பிரிட்டனோ நரியை நரியாய்க் காட்டியது

சைவ சமயத்தில் நாயன்மார்கள் அறுபத்து மூன்று பேர். அவர்களில் மன்னர்களும் உண்டு, மந்திரிகளும் உண்டு, வேடர்களும் உண்டு.

இன்னார்தான் நாயன்மாரில் இடம்பெற வேண்டும் என்று அங்கெல்லாம் 'காடர்' (CARDER) கிடையாது. அன்பர் பணிசெய்து தில்லைக்கூத்தன் தரிசனப் பேறுபெற்ற திருவுடையார் நாயன்மார் பட்டியலில் சேர்க்கப்பட்டனர். இதில் திருவாசகம் தந்த மாணிக்கவாசகப் பெருமான் மந்திரியாக இருந்தவர். என்ன மந்திரியோ யாமறியோம். ஆனால் இப்போது இலங்கையில் இருக்கக்கூடிய மந்திரிகள் போல் அவர் யாரையும் கட்டவில்லை.

மாறாக ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலத்தால் தாம் கட்டுண்டிருப்பதை அறிந்து அதை அறுத்து பேரானந்தப் பெரும்பேற்றை அடைய முற்பட்டார்.

அவர் தந்ததே திருவெம்பாவை. பாவைகள் நோன்பு நோற்கும் காலம் இதுவென்பதாலும் அவரின் பெருமை பேசுவது இவ்விடத்தில் பொருந்தும்.

ஒருமுறை பாண்டிய மன்னன் குதிரை வாங்குவதற்காக அமைச்சர் மாணிக்கவாசகரிடம் பணத்தைக் கொடுத்து அனுப்புகிறான். மாணிக்கவாசகரோ பணம் முழுவதையும் சிவதானத்திற்கு செலவிடுகின்றார்.

அட! அந்தக் காலத்திலும் ஊழல் நடந்துள்ளது என்று யாரும் எண்ணிவிடாதீர்கள். மாணிக்கவாசகர் செலவிட்டது அரச பணமாயினும் நடந்தது புண்ணியகாரியம்.

குதிரை வாங்குவதற்காக கொண்டுசென்ற பணத்தைச் செலவிட்டதால் குதிரைகள் வரவில்லை. வெறுங்கையோடு அரண்மனை திரும்புகிறார் மாணிக்கவாசகர்.

மாணிக்கவாசகரின் நிலைமையை உணர்ந்த பரமசிவன் காட்டு நரிகளை (பரிகளாக) குதிரைகளாக ஆக்கி பாண்டிய மன்னனிடம் அனுப்பிவைக்கின்றார்.

இவை அமைச்சர் மாணிக்கவாசகருக்காக சிவன் செய்த புதுமை.

கூடவே மன்னன் பாண்டியனைத் திருத்துவதற்காகவும் நடத்திய நாடகம் தான் இவை.

அதுசரி, இதெல்லாம் எதற்கென்று நீங்கள் கேட்பதும் தெரிகிறது. எல்லாம் காரணத்தோடுதான்.

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரிட்டனுக்குச் சென்றபோது பாதுகாப்பு அமைச்சர் லியம் பொக்ஸ் (Liam Fox) அவரைச் சந்தித்து அங்கு பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார். இப்போது லியம் பொக்ஸ் இலங்கை வந்து அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் நினைவுப் பேருரையை ஆற்றுவதற்கு ஏற்பாடாகியிருந்தது.

இந்நிலையில் லியம் பொக்ஸ் இலங்கைக்கு செல்லக்கூடாது என பிரிட்டன் அரசு தடுத்துவிட்டது.

அடக் கடவுளே! தனது நாட்டுப் பாதுகாப்பு அமைச்சரை இலங்கைக்குச் செல்லக்கூடாது என பிரிட்டன் அரசு தடுத்தமை சாதாரண விடயமா என்ன?

என்ன நடந்திருக்கும்? வன்னியுத்தம் நடந்து கொண்டிருந்தபோதும் லியம் பொக்ஸ் இலங்கைக்கு வந்து போனவர்.

அட! மாணிக்கவாசகர் சிவத் தொண்டுக்காய் பணத்தைச் செலவிட நரி பரியாகியது. ஆனால் லியம் பொக்ஸ் விடயத்தில் நரி நரிதான் என்பதையே பிரிட்டன் நிரூபித்துள்ளது.

நரி, பரி விளையாட்டெல்லாம் கொடுத்ததாலும், எடுத்ததாலும் நடந்தவைதான்.

# பரீட்சை மண்டபத்துக்கு வெளியே 11 மணிவரை காத்திருந்த மாணவி!

## நாவற்குழியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை எழுதச் சென்ற மாணவி ஒருவர் முற்பகல் 11 மணி வரையும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்படாத சம்பவம் ஒன்று நேற்று இடம் பெற்றுள்ளது.

நாவற்குழி மகாவித்தியாலயத்திலுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சை எழுதும் மாணவி ஒருவருக்கே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்று நடைபெற்ற பரீட்சைக்குச் சென்ற மாணவி முற்பகல் 11 மணி வரைக்கும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படவில்லை. எனினும் யுனிசெவ் அமைப்பின் நடவடிக்கையை யடுத்து பிரஸ்தாப மாணவி பரீட்சை எழுத அனுமதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை பிரஸ்தாப மாணவி குறிப்பிட்ட நேரத்துக்கு சமுகமளிக்காததனாலேயே பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்படவில்லை எனவும் கூறப்பட்டது. இச்சம்பவம் குறித்து தனக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக வட மாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்தார். (எ-5)

# மணல் விநியோகம் வழமைக்கு; மகேஸ்வரி நிதியம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த இரண்டு மாதங்களாக தடைப்பட்டிருந்த மணல் விநியோகமானது தற்போது வழமைக்குத் திரும்பியுள்ளதாக மகேஸ்வரி நிதியத்தின் செயற்றிட்ட இணைப்பாளர் த.றஜீவ் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு வருமாறு.

யாழ்குடாநாட்டின் அபிவிருத்திப் பணிகளில் பெரும் பங்கெடுத்துவரும் மணலானது கடந்த இரண்டு மாதங்களாகக் கிடைக்கப்பெறாமையினால் அபிவிருத்திக் கட்டுமானப் பணிகள் அனைத்தும் ஸ்தம்பிதம் அடைந்த நிலையில் காணப்பட்டது. சாதாரணமாக மாதாந்தம் தேவைப்படும் மணலிலும் குறைவான அளவினையே எமக்கு வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரத்திற்கு அமைவாக வழங்கக்கூடியதாக இருந்தது. ஆனால் கடந்த இரண்டு மாதங்கள் முற்றாக விநியோகம் தடைப்பட்டதன் மூலம் தற்போதைய தேவையானது மேலும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்றிட்டங்கள் (வீட்டுத் திட்டங்கள் உட்பட) அனைத்தும் குறிப்பட்ட கால அவகாசத்துடனேயே நடைபெறுகின்றன. இந்நிலையில் மணல் கிடைக்கப்பெறாமையினால் குறிப்பிட்ட அபிவிருத்தித் திட்டங்கள் குறித்த காலப்பகுதிக்குள் நிறைவு செய்யப்படாது அப்பணமானது பயன்பாட்டுக்கு உபயோகிக்கப்படாமல் திரும்பிச் செல்லும் துர்ப்பாக்கிய நிலையே காணப்படுகின்றது.

ஆனால் இவை எதனையும் பொருட்படுத்தாமல் தமது சுயலாப நோக்கங்களுக்காக எவ்வாறாயினும் மணல் விநியோகத்தினை தடுத்து நிறுத்தவேண்டும் என கங்கணம் கட்டிக்கொண்டு திரியும் ஒருசிலரால் பல்வேறுவிதமான இடையூறுகள், தவறான பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டேயிருக்கின்றன. இதனால் பாதிக்கப்படுவது எமது மக்களும், எமது பிரதேச அபிவிருத்தியுமே. எனவே தயவுசெய்து இவ்வாறான சுயலாப சூழ்ப்புணர்ச்சிகளை களைந்து எமது பிரதேச அபிவிருத்திக்காக மக்களோடு கைகோத்து சரியான பாதையில் அபிவிருத்தியினை மேற்கொள்ள அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும் என மகேஸ்வரி நிதிய செயற்றிட்ட இணைப்பாளரின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு)

# நல்லூரில் இன்று எழுத்தாளர் தகவல் அமர்வு

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் ஜனவரி மாதம் நடைபெறவுள்ள சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு தொடர்பான தகவல் அமர்வுக் கூட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

மாநாட்டில் கலந்துகொள்ளும் பேராளர்களுக்கான பதிவுகள் மற்றும் மாநாட்டின் நோக்கங்கள் பற்றிய கலந்துரையாடல் இத் தகவல் அமர்வுக் கூட்டத்தில் இடம்பெறவிருப்பதனால் யாழ்குடாநாட்டில் வதியும்எழுத்தாளர்கள் இக் கூட்டத்திற்கு அழைக்கப்படுகின்றனர்.

மாநாட்டின் அமைப்பாளர் லெ.முருகபூபதி மற்றும் மாநாட்டின் பொருளாளர் பூபாலசிங்கம் ஶ்ரீதரசிங் ஆகியோர் இக் கூட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளனர். (சு)

# அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யா/பெரியபுலம் மகாவித்தியாலயத்தின் வகுப்பு IC சேர்ந்த அதிபர் பதவிக்கான விண்ணப்பங்கள் யாழ்ப்பாணம் கல்வி வலயத்திலிருந்து மாகாணப் பாடசாலைகளில் கடமைபுரியும், சேவை நீடிப்பில் இல்லாத இலங்கை அதிபர் தரத்தைச் சேர்ந்தவர்களிடமிருந்தும், ஆசிரியர் சேவை வகுப்பு 1, மற்றும் 2-1ஐச் சேர்ந்தவர்களிடமிருந்தும் கோரப்படுகின்றன.

இவ் விண்ணப்பப்படிவங்களை ஆசிரிய நிர்வாக கிளையில் பெற்று பூரணப்படுத்தி எதிர்வரும் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன் ஒப்படைக்குமாறு யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். அத்துடன் அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்காத சந்தர்ப்பத்தில் மட்டுமே ஆசிரியர் தரத்தைச் சேர்ந்தவர்களின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (சு-4)

# சிதம்பர தர்சனம் இறுவட்டு வெளியீட்டு விழா

காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் தயாரித்து வழங்கும் சிதம்பர தரிசனம் இறுவட்டு வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு காரைநகர் ஈழத்துச் சிதம்பர வசந்த மண்டபத்தில் காரைநகர் கிழவன்காடு கலாமன்றத் தலைவர் ந.சோதிநாதன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும், வாழ்நாள் பேராசிரியருமான பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை, சிறப்பு விருந்தினர்களாக வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், காரைநகர் உதவி அரசாங்க அதிபர் ஆர்.ரி.ஜெயசீலன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (ஶ்ரீ-2,9)

# திறந்த பல்கலைக்கழக இணைப்பாளரின் அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தின் பொது ஆங்கில சான்றிதழ் கற்கைநெறி மாணவர்களுக்கான மீள் பதிவுகளை இதுவரை மேற்கொள்ளாதவர்கள் எதிர்வரும் 20ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன் காலை 9.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை யாழ்-பிராந்திய நிலையத்தில் பதிவுகளை மேற்கொள்ள முடியுமென இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

✦ ✦ ✦

இலங்கைப் பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் இளைஞர் அபிவிருத்திச் சான்றிதழ் கற்கைநெறிக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கான பதிவுகளை இதுவரை மேற்கொள்ளாதவர்கள் எதிர்வரும் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன் காலை 9.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை யாழ்.பிராந்திய நிலையத்தில் பதிவுகளை மேற்கொள்ள முடியுமென இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

✦ ✦ ✦

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் சிங்கள சான்றிதழ் கற்கைநெறி மாணவர்களுக்கான மீட்டல் பரீட்சை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறுமென இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

✦ ✦ ✦

IPM நிறுவனம் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்துடன் இணைந்து நடத்தும் மனிதவள முகாமைத்துவக் கற்கைநெறியின் இறுதிப் பரீட்சை இன்று காலை 11.00 மணிக்கு நடைபெறுமென இணைப்பாளர் அறிவித்துள்ளார். (சு)

# வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சங்கானை வர்த்தகர், கைத்தொழில் உரிமையாளர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கௌரவ விருந்தினராக யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் வலிமேற்கு பிரதேச செயலக அபிவிருத்திக் குழுத் தலைவருமான முருகேசு சந்திரகுமார், பிரதேச செயலர் திருமதி பாபு தேவநந்தினி, வலி. மேற்குப் பிரதேச சபைச் செயலாளர் சு.புத்திரசிகாமணி ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளார்கள். (ஶ்ரீ-6)

# போயா மாதாந்த ஆன்மீக சாதனை

யாழ்ப்பாணம் சத்திய சாயி சேவா நிலையத்தில் நாளை மறு தினம் திங்கட்கிழமை காலை 4.45 மணிக்கு நகர சங்கீர்த்தனம் இடம்பெற்று, காலை 8.45 மணிக்கு போயா நிகழ்ச்சிகள் ஆரம் பமாகி பஜனை, சிறப்புச் சொற்பொழிவு, மங்களாராத்தி என்பன இடம்பெற்று மதிய போசனத்துடன் நிறைவடையும். (ஶ்ரீ)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



ஒருவனுக்கு அவனது தகுதிக்கேற்ப எது கிடைக்க வேண்டுமோ, அது உலகமே எதிர்த்து நின்றபோதிலும் அவனுக்குத் திண்ணமாகக் கிடைத்துவிடும். உலகில் எந்தச் சக்தியாலும் அதைத் தடுத்து நிறுத்த முடியாது என்பதை நம்புகிறவர்களில் நானும் ஒருவன். கடந்த காலம் பொன்னானதுதான். அதில் ஏதும் ஐயமில்லை. ஆனால் நமது வருங்காலமோ மகத்தானதாக விளங்கப் போகிறது. இதை நான் மனப்பூர்வமாக நம்புகிறேன். இதற்கு வேண்டிய தூய்மை, துணிவுடைமை எனும் இவற்றை சிவபெருமான் நமக்கு அருள்வாராக,

நாம் பார்க்கும் மக்களில் தொண்ணூறு சதவீதம் மனித உருவில் வாழ்ந்து கொண்டிருக்கும் விலங்குகளே ஆவர். வாழ்பவர்களல்லர் அவர்கள். வெறும் நடைப்பிணங்கள். மனிதப் பிசாசுகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரான் மசூதியில் குண்டுவெடிப்பு 40 பேர் உடல் சிதறிப் பலி



ஈரான் நாட்டில் மசூதிக்கு உள்ளேயும் வெளியேயும் அடுத்தடுத்து நேற்று முன்தினம் பயங்கர குண்டுகள் வெடித்தன. அதில் தொழுகையில் ஈடுபட்டிருந்தவர்களில் 40 பேர் உடல் சிதறி பலியாகினர். 20 க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். ஈரானின் துறைமுக நகரம் சபாகர். அங்கு இமாம் உசேன் மசூதியுள்ளது. மொகரத்தை முன்னிட்டு ஏராளமான ஷியா பிரிவு முஸ்லிம்கள் சிறப்பு தொழுகையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது மசூதிக்கு வெளியே பயங்கர சத்தத்துடன் குண்டு வெடித்தது. மசூதிக்குள் இடமில்லாமல் வெளியே காத்திருந்தவர்கள் மற்றும் அந்த வழியாக சென்றவர்கள் அதில் சிக்கினர். சக்தி வாய்ந்த குண்டு வெடித்ததில் பலர் உடல் சிதறிப் பலியாகினர். வெளியே கேட்ட பயங்கர சத்தம் மற்றும் மரண ஓலத்தால் அதிர்ந்து தொழுகையில் இருந் தவர்கள் எழுந்த நிலையில் மசூதிக்குள் ஒரு குண்டு வெடித்தது. அதிலும் பலர் சிக்கி பலியா கினர். இரண்டு குண்டு வெடிப்புகளிலும் மொத்தம் 40 பேர் பலியானதாக சபாகர் பகுதி பொலி ஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் அருகில் உள்ள வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். வெடிகுண்டை வெடிக்கச் செய்ததாக சந்தேகத்தின் பேரில் ஒரு தீவிரவாதியை பொலிஸார் கைது செய்தனர். சன்னி பிரிவைச் சேர்ந்த தீவிரவாதிகள் இந்த தாக்குதலை நடத்தியிருக்கலாம் என கூறப்படுகிறது. (ஸ்ரீ-2)

# 2011 இல் ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறும்

## ஒபாமா தெரிவிப்பு



(வோஷிங்டன்)

எதிர்வரும் 2011 ஆம் ஆண்டு ஜூலைக்குள் ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்க படைகள் நிபந்தனையின்றி வெளியேறும் என ஜனாதிபதி ஒபாமா தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தான்-பாகிஸ்தானில் தலிபான்களை ஒடுக்குவது குறித்த ஆலோசனைக்கூட்டம் வோஷிங்டனில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு பேசிய அவர் 2011 ஆம்ஆண்டு ஜூலை மாதத்திற்குள் ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்க படைகள் முழுவதும் வெளியேறும் என தெரிவித்தார்.

தொடர்ந்து ஆப்கானில் நிரந்தர அமைதி ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கூறினார். (ஸ்ரீ-2)



இந்தோனேசியாவின் பாலி தீவில் பங்க் ஜம்ப் எனப்படும் உயரமான இடத்தில் இருந்து காலில் கயிற்றைக்கட்டிக் கொண்டு குதிக்கும் பிரபலமான விளையாட்டில் நத்தார் பாப்பா வேடமணிந்தவர் குதித்து விளையாடுவதை படத்தில் காணலாம்

# மலேசிய எதிர்க்கட்சித் தலைவர் 6 மாத காலத்துக்கு இடைநிறுத்தம்



(கோலாலம்பூர்)

மலேசிய அரசின் இஸ்ரேல் ஆதரவு செயற்பாடு குறித்து விமர்சித்த எதிர்க்கட்சித் தலைவர் அன்வர் இப்ராகிம் மற்றும் அவரது தோழமை கட்சியை சேர்ந்த மூன்று பேர் ஆறு மாத காலத்துக்கு பாராளுமன்றிலிருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளனர்.

மலேசிய முன்னாள் துணை பிரதமர் அன்வர் இப்ராகிம். இவர் மீது சுமத்தப்பட்ட ஓரின சேர்க்கை மற்றும் ஊழல் குற்றச்சாட்டு காரணமாக ஆறு ஆண்டு காலம் சிறைத் தண்டனை அனுபவித்தார்.

இது தொடர்பான வழக்கு இன்னும் நிலுவையில் உள்ளது. கடந்த தேர்தலில் இவர் போட்டியிட்டு எதிர்க்கட்சி எம்.பி.யானார். மலேசிய அரசின் திட்டங்கள் இஸ்ரேல் வகுத்துக் கொடுத்த திட்டங்களின் அடிப்படையில் உள்ளதாக பாராளுமன்றில் குற்றம் சுமத்தினார்.

மலேசியாவுக்கும் இஸ்ரேலுக்கும் எந்த ஒப்பந்தமும் இல்லாத நிலையில் அன்வர் இப்ராகிமின் குற்றச்சாட்டு பாராளுமன்றின் மரபுக்கு எதிரானதாக உள்ளதாக கூறி அவரை இடைநிறுத்தம் செய்ய ஆளும் கட்சி உறுப்பினர்கள் வற்புறுத்தினர்.

இதைத் தொடர்ந்து அன்வர் இப்ராகிம் அவரது கூட்டணி கட்சியைச்சேர்ந்த எம்.பி.க்கள் கர்பால்சிங், சிவராசா ஆஸ்மின் அலி ஆகியோரும் ஆறு மாத காலத்துக்கு பாராளுமன்றிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-2)

# ஐவரிக்கோஸ்ட் நாட்டில் இடம்பெற்ற கலவரத்தில் 20 பேர் பலியாகினர்

(அபிதிஜான்)

ஐவரிகோஸ்ட் நாட்டில் பாதுகாப்புப்படையினருக்கும் எதிர்க்கட்சி தலைவரின் ஆதரவாளர்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதல் கலவரமாக வெடித்ததில் 20 பேர் பலியாகினர்.

மேற்கு ஆபிரிக்க நாடான ஐவரிகோஸ்ட் நாட்டில் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெற்றது. இதில் ஜனாதிபதி வேட்பாளர்களாக போட்டியிட்ட இரு கட்சித் தலைவர்களிடையே யார் ஜனாதிபதியாக வருவது என போட்டி ஏற்பட்டது.

இதனால் எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் வன்முறையில் இறங்கினர். இதையடுத்து பாதுகாப்புப் படையினருக்கும் கலவரக்காரர்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் 20 பேர் பலியாகினர் என குறிப்பிப்படுகின்றது. (ஸ்ரீ-2)




# சீனா தேவைக்கதிகமாக இராணுவத்தைக் குவிக்கிறது

## அமெரிக்கா குற்றச்சாட்டு

(வோஷிங்டன்)

சீனா தன் பாதுகாப்புக்கு தேவையானதை விட அதிகமாக இராணுவத்தை குவித்து வருவதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டி உள்ளது.

இது தொடர்பாக இராணுவ இலாகா துணை மந்திரி வாலஸ் சிப் கிரெக்சன் கூறுகையில்,

இராணுவத்துக்கான நிதி ஒதுக்கீடு, இராணுவ நோக்கம், இராணுவத்தில் உள்ள ஆயுதங்களின் திறன் ஆகியவை குறித்து சீனா வெளிப்படையாக இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், இந்தப் பிராந்தியத்தில் உள்ள பல நாடுகளின் கவலையை அமெரிக்கா பகிர்ந்து கொள்கிறது என்றும் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

# புற்றுநோய் சிகிச்சை முறையில் எயிட்ஸ் நோயை குணப்படுத்தலாம்

## விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

(ஜேர்மனி)

புற்றுநோயை குணப்படுத்த ஹீமோ தெரபி எனும் கதிரியக்க சிகிச்சை அளிக்கப்படுகிறது. இதே மாதிரியான சிகிச்சையை எயிட்ஸ் நோயாளிகளுக்கு அளித்து அவர்களை குணப்படுத்திவிடலாம் என ஜெர்மனி விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இந்த ஆய்வை மேற்கொண்ட ஜெர்மனியை சேர்ந்த சாரைட் பல்கலைக்கழக மருத்துவ விஞ்ஞானிகள் இக்கூற்றைத் தெரிவித்துள்ளனர். அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

எய்ட்ஸ் நோயாளி ஒருவருக்கு ஹீமோ தெரபி மூலம் சிகிச்சை அளித்து எய்ட்ஸ் பாதித்த செல்கள் அழிக்கப்பட்டது. அதன் பின்னர் ஸ்டெம் செல் சிகிச்சை முறையில் புதிய செல்களை உடலினுள் செலுத்தப்பட்டன. இந்த சிகிச்சையினால் அவருக்கு எய்ட்ஸ் நோய் குணமாகியுள்ளது. 2007 ஆம் ஆண்டு இந்த சிகிச்சையை தொடங்கினார்கள்.

எய்ட்ஸுக்கு கொடுக்கப்பட்ட மருந்துகளை நிறுத்தி விட்டு புதிய சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. அதில் முன்னேற்றம் ஏற்பட்டது. 13 மாதங்களுக்கு பின்னர் 2 ஆம் கட்ட சிகிச்சை நடந்தது. அதில் ஸ்டெம்செல்கள் உடலில் ஏற்றப்பட்டன. அது உடலில் மாற்றத்தை ஏற்படுத்தி எயிட்ஸை குணமாக்கியுள்ளது.

இந்த சிகிச்சை முறையில் புற்றுநோய்க்கு அளிக்கப்படும் ஹீமோதெரபி கதிர்களை அதிக அளவில் செலுத்த வேண்டியுள்ளது.

இதனால் உடலில் பக்க விளைவுகள் ஏற்படலாம் என்பதோடு இச்சிகிச்சை முறையில் இன்னும் சில முன்னேற்றங்களை ஏற்படுத்தி விட்டால் எய்ட்ஸ் நோயை முற்றிலும் ஒழித்து விட வாய்ப்பு இருப்பதாக விஞ்ஞானிகள் தெரிவித்தனர். (ஸ்ரீ-2)



ஐக்கிய அரபு எமிரேட் , அபுதாபியில் உள்ள எமிரேட் பேலஸ் விடுதியில் 11 மில்லியன் டொலர் செலவில் மிக பிரமாண்டமான தங்கம் மற்றும் விலை உயர்ந்த கற்களால் ஆன கிறிஸ்மஸ் மரம் வைக்கப்பட்டுள்ளதை படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதியான நாடாக இலங்கை ஏற்கப்படவில்லை

## அமைச்சர் விமல் கவலை



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான போர் முடிபடைந்து இரு வருடங்கள் முடிபடைந்த நிலையிலும் சில நாடுகள் இலங்கையை அமைதியான நாடாக ஏற்றுக்கொள்ளவில்லை என அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லையில் உள்ள வீடமைப்பு நிர்மாணப் பயிற்சி நிலையத்தில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றியபோதே அமைச்சர் விமல் வீரவன்ச இதனைத் தெரிவித்தார். இவ் வைபவத்தில் அமைச்சர் விமல் வீரவன்ச மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது.

உலகில் பாதுகாப்பு நாடாக இருந்த சுவீடனில் சுட குண்டுகள் வெடித்துள்ளன. ஆனால் போர் முடிபடைந்து இரண்டு வருடமாகியும் சில நாடுகள் இலங்கையை அமைதியான நாடாக இதுவரை ஏற்றுக்கொள்ளவில்லை. இருந்தும் உல்லாசப்பிரயாணி கள் கூடுதலானோர் இலங்கைக்கு வருகை தருகின்றனர்.

கடந்த வாரம் ஐக்கியதேசியக் கட்சியின் மாநாட்டின் போது அக் கட்சி யின் உறுப்பினர்கள் தேசிய கீதத்திற்கு நடன மாடி கூச்சலிடுகின்றனர். தேசிய கீதம் என்பதில் ஒரு ஒழுக்கமான உணர்வு உள்ளது.

இத் தேசிய கீதம் இந்த நாட்டில் வாழும் பெரும்பான்மை மக்களது மொழியிலேயே இருக்கவேண்டும். இதனைத் தமிழ் மொழியில் மொழிபெயர்த்து இசைப்பது நிறுத்தப்படல் வேண்டும். இதனைத் 1918 ஆம் ஆண்டின் யாப்பில் சிலர் உள்ளடக்கியுள்ளனர். என தனதுரையில் தெரிவித்தார். (சு-5)

# கொள்ளைச் சம்பவங்களை தடுக்க பொலிசாருடன் பேச்சு!

## யாழ் அரச அதிபர் உறுதியளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் அண்மைக்காலமாக அதிகரிக்கும் கொள்ளைச் சம்பவங்களைத் தடுப்பதற்கு பொலிசாரை விரைவில் அழைத்து உரிய பாதுகாப்பு ஒழுங்குகள் மேற் கொள்ளப்படும் என யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

அத்துடன் இக் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபடுபவர்கள் ஆயுதக் குழுக்களைச் சேர்ந்த முன்னாள் உறுப்பினர்களாக இருப்பதாகவும் சங்கானையில் இந்துக் குருக்கள் குடும்பத்தினருக்கு நடந்ததைப்போன்று இனி நடைபெற இடமளிக்கக் கூடாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது.

அண்மையில் சங்கானையில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்தில் ஆயுதம் பயன்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு கொள்ளையில் ஈடுபட்டவர்கள் விடுதலைப்புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்கள் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

எனினும் அந்நபர் புனர்வாழ்வு அளிக்கப்பட்ட பின்பே சமூகத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார். எனினும் பல்வேறுபட்ட காரணங்களினால் அவர் ஆயுதப் பயன்படுத்தல் மூலம் கொள்ளையில் ஈடுபடுகிறார்.

இதேபோன்று ஆயுதக் குழுக்கள் பல சமாதானத்தை நோக்கிச் செல்லும் நாட்டில் ஜனநாயக வழிக்குத் திரும்பியுள்ளனர்.

எனினும் அதன் சில உறுப்பினர்கள் தமது ஆயுத கலாசாரத்திலிருந்து மீளவில்லை. இவ்வாறான சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு உரிய வேலைவாய்ப்புக்களை வழங்கி வறுமை உட்பட்ட பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும்.

கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பில் விரைவில் பொலிசாருடன் கலந்துரையாடி ஒவ்வொரு ஊர்களிலும் பொலிஸ் மையம் அமைக்கப்படும்.

இதனூடாக பெலிசாரின் ரோந்து நடவடிக்கைகளை அதிகரித்து கொள்ளைச் சம்பவங்கள் உட்பட குற்றச் செயல்களைத் தடுக்க முடியும் என்றார். (சு-5)

# இந்தியா முதல் இன்னிங்ஸில் 136; தென்னாபிரிக்க அணி முன்னிலையில்

அம்லா, கலிஸ் சதமடித்து அசத்த தென்னாபிரிக்க அணி நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டநேர முடியில் 2 விக்கெட்டுக்களையிழந்து 366 ஓட்டங்களை எடுத்தது.

முன்னதாக இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 136 ஓட்டங்களை எடுத்தது.

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 3 டெஸ்ட் போட்டிகள், ஒரே ஒரு இருபது- 20 போட்டி மற்றும் 5ஒருநாள்போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது. இதில் முதலாது டெஸ்ட் நேற்றுமுன்தினம்செஞ்சூரியனில்ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணித்தலைவர் சிமித் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார். இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத் தாடிய இந்திய அணி நேற்று முன்தினம் முதல் நாள் ஆட்டநேர முடியில் 9 விக்கெட்டுக்களையிழந்து 136 ஓட்டங்களை எடுத்தது.

இந்நிலையில் இரண்டாம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் 136 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

இதில் அணித்தலைவர் தோனி 33 ஓட்டங்களை எடுத்தார். பந்துவீச்சில் மோர்னி மோர்க்கல் 5 விக்கெட்டுக்களையும் ஸ்ரைன் 3 விக்கெட்டுக்களையும் கலிஸ் ஒரு விக்கெட் டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய தென்னபிரிக்க அணி நேற்றைய 2 ஆம் நாள் ஆட்ட நேர முடியில் 2 விக்கெட்டுக்களை இழந்து 366 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ஹசிம் அம்லா 116 ஓட்டங்களுடனும் ஜக்கலிஸ் 102 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் உள்ளதுடன் பீற்றர்ஸன் 77, அணித் தலைவர் சிமித் 62 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஹர்பஜன் சிங் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இப்போட்டியின் 3 ஆம் நாள் ஆட்டம் இன்றாகும். இந்நிலையில் தென்னாபிரிக்க அணி முதலாவது இன்னிங்ஸில் 230ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலையில் உள்ளது.

# திருடர்கள் மூவர் மடக்கிப்பிடிப்பு

யாழ்ப்பாணம் ஆறுகால் மடத்தில் திருட்டு நடவடிக்கையில் ஈடுபட முனைந்த மூவர் அவ்வூர் இளைஞர்களினால் மடக்கிப் பிடிக்கப்பட்டனர்.

நேற்று முன்தினம் ஆறுகால்மடம் பழம் வீதியில் வீடு ஒன்றின் வீட்டுக்காரருக்கு தொலைபேசி அழைப்பு ஒன்று வரவே அவர் வெளியில் சென்று கதைத்துள்ளார். அதே வேளை வீட்டு மரத்திற்கு பின்னால் புகைப்பி டிக்கும் வெளிச்சம் தெரியவே வீட்டிற்குள் வந்து நண்பர்களுக்கு தொலைபேசியில் அழைப்பு விடுத்து வீட்டு வளவினுள் யாரோ நுழைந்துள்ளனர் என்றும் உடனே வரும்படியும் கூறினர். விரைந்து வந்த இளைஞர்கள் வீட்டு வளவினுள் நின்ற மூவரையும் மடக்கிப் பிடித்தனர். இளைஞர்கள் அவர்களைத் தாக்கி தகவல் கேட்டபோது தாம் திருடவந்ததை ஒப் புக்கொண்டனர். பிடிக்கப்பட்ட திருடர்கள் இராணுவத்தினர் ஊடாக மானிப்பாய் பொலிஸிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (சு-5)

# நீதிமன்றில் ஏல விற்பனை

யாழ்ப்பாண நீதிவான் மன்றினால் பறிமுதல் செய்யப்பட்ட உரிமை கோரப்படாத சான்றுப் பொருட்கள் எதிர்வரும் 22 ஆம் திகதியன்று பகிரங்க ஏலத்தில் விற்கப்படவுள்ளதாக பதிவாளர் அறிவித்துள்ளார்.

ஏல விற்பனை காலை 10.00 மணிக்கு ஆரம்பிக்கப்படும். பொருட்களை கொள்வனவு செய்பவர்கள் கொடுப்பனவாக பணத்தினை மட்டும் கொடுக்கவேண்டும். காசோலை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது எனவும் பதிவாளர் மேலும் தெரிவித்தார். (சு)

# இலங்கைக்கு எதிரான குற்றச்சாட்டு மௌனம் காக்கிறது கனடா

இலங்கைக்கு எதிரான போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கனடா மௌனம் காத்தல் கூடாது என கனேடிய முன்னணி ஆங்கிலப் பத்திரிகை ஒன்று வலியுறுத்துகின்றது.

இலங்கைக்கு எதிரான யுத்தக் குற்றச்சாட்டுக்கள் சம்பந்தப்பட்ட விடயங்களில் கனடா பேசாமடந்தையாக உள்ளது என கனேடிய ஆங்கிலப் பத்திரிகையான த ஸ்டார் இல் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கைத் தமிழர் விவகாரம் தொடர்பாக எழுதப்பட்டுள்ள அதன் பத்தியொன்றிலேயே மேற்கண்ட விடயம் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இப்பத்தியை லோரியர் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டத்துக்கான ஆய்வை மேற்கொண்டு வரும் தமிழ் தேசியவாதிகளில் ஒருவரான அமர்நாத் அமரசிங்கம் என்பவர் எழுதியுள்ளார்.

இலங்கைக்கு எதிரான யுத்தக் குற்றச்சாட்டுக்கள் சர்வதேச மட்டத்தில் விசாரிக்கப்பட வேண்டும் என்று ஏனைய உலக நாடுகளுடன் சேர்ந்து கனடாவும் குரல் கொடுக்க வேண்டும் என இவர் இப்பத்தியின் மூலமாகக் கோரிக்கை விடுத்துள்ளார். (சு-5)

# யாழில் அபிவிருத்தியை முன்னெடுக்க...

நலத் திட்டங்களை ஏற்படுத்தல், புனர்வாழ்வு வழங்கப்பட்டு சமூகத்தில் இணைக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கல் போன்றவை விரைவாக வழங்கப்படுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

யாழ்.மாவட்ட அரச அதிபர் செயலக அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன் போது அவர் மேலும் தெரிவித்ததாவது,

யாழ்.மாவட்டத்தில் உயர் பாதுகாப்பு வலயம், பாதுகாப்பு வலயம் மற்றும் ஏனைய பிரதேசங்களைச் சேர்ந்த 18 ஆயிரத்து 993 குடும்பங்களைச் சேர்ந்த 70 ஆயிரத்து 423 பேர் இடம்பெயர்ந்துள்ளனர். இவர்களில் பலர் உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ளனர்.

இவர்களில் கடந்த மாதம் தெல்லிப்பளை பிரதேச செயலக பிரிவில் பாதுகாப்பு வலயங்களாகவிருந்த இளவாலை வடக்கு, இளவாலை வடமேற்கு, வித்தகபுரம் ஆகிய இடங்களில் 989 குடும்பங்களைச்சேர்ந்த 3 ஆயிரத்து 518 பேர் மீள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் யாழ்.மாவட்டத்தில் 60 ஆயிரம் வீடுகள் முழுமையாக அமைத்தோ அல்லது திருத்தப்பட வேண்டியுள்ளது.

இதில் இந்திய அரசினால் 5 ஆயிரத்து 120 வீடுகளும் உலக வங்கியினால் 2 ஆயிரத்து 700 வீடுகளும் இந்திய அரசினால் 2 ஆயிரம் வீடுகள் திருத்தப்பட்டும் வழங்கப்படுகிறது. அத்துடன் அரசசார்பற்ற நிறுவனங்கள் 700 வீடுகள் வரை கட்டிக்கொடுக்கின்றன.

அத்துடன் 2011 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டுவரை 5 ஆண்டுகளுக்கு யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களை நிரல்படுத்தியுள்ளோம்.

இத் திட்டத்தினூடாக பிரதேச செயலகங்கள், திணைக்களங்களுடன் இணைந்து அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படும். குறிப்பாக,

யாழ்.மாவட்டத்தில் உயர் பாதுகாப்பு வலயம், பாதுகாப்பு வலயம் மற்றும் ஏனைய பிரதேசங்களிலிருந்து இடம்பெயர்ந்துள்ள 18 ஆயிரத்து 993 குடும்பங்களைச் சேர்ந்த 70 ஆயிரத்து 423 பேர் சொந்த இடங்களில் விரைவாக மீள் குடியமர்த்தப்படுவர்.

அத்துடன் அவர்[illegible] வீடு, கல்வி, சுகாதார, உட்கட்[illegible] வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

இவற்றுடன் யாழ்.மாவட்டத்தில் போர் மற்றும் ஏனைய சம்பவங்களால் விதவைகளாக வாழ்கின்ற 27 ஆயிரம் பெண்களுக்கு வாழ்வாதாரங்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

யாழ்.மாவட்டத்தில் இருதயநோய், புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள 246 சிறுவர்கள் தொடர்பில் கவனமெடுக்கப்படும். புனர்வாழ்வு வழங்கப்பட்டு சமூகத்துடன் இணைக்கப்பட்டுள்ள முன்னாள் போராளிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவற்றுக்கு மேலாக வீதி உட்பட மாவட்டத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யப்படும்.

### உயர் பாதுகாப்பு வலயங்களாக மட்டுப்படுத்தப்பட்ட பிரதேசம்

கடந்த யூலை 13 ஆம் திகதி நான் யாழ்.மாவட்ட அரச அதிபராக பதவியேற்ற பின்னர் யாழ்.படைத்தளபதியிடம் வலி வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தினை நீக்கி அப்பிரதேச மக்களை சொந்த இடங்களில் மீள் குடியமர அனுமதிக்குமாறு கேட்டுக்கொண்டேன்.

வலி வடக்கு உயர் பாதுகாப்பு வலயம் [illegible]த்துடன் அற்றுப்போனதாகவும் தற்போது மட்டுப்படுத்தப்பட்ட பிரதேசமேயுள்ளதாகவும் யாழ்.படைத்தளபதியினால் பதிலளிக்கப்பட்டது.

இதற்கமைவாகவே யாழ்.மாவட்டத்தில் உயர் பாதுகாப்பு வலயம் இல்லை என்ற கூற்றை நான் தெரிவித்தேன்.

ஆனால் வலி வடக்கு பாதுகாப்பு வலயமாக உள்ள பிரதேசத்தில் முற்றாக கண்ணிவெடியகற்ற10 ஆண்டுகள்தேவையெனக்கண்ணிவெடியகற்றும் நிறுவனங்கள் தெரிவித்தன. எனினும் கண்ணிவெடி அகற்றப்பட்டு உடனடியாகவே சான்றிதழ் பெற்று மக்களை படிப்படியாக மீள் குடியமர்த்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

### மணல் விநியோகம் சீர் செய்யப்படும்

யாழ்.மாவட்டத்தில் மணல் விநியோகம் தனியார் நிறுவனத்திடம் வழங்கப்பட்டுள்ளது. குறித்த நிறுவனம் அனுமதி பெற்று மணல்விநியோகத்தை மேற்கொண்டு வருகின்றது.

எனினும் மணல் விநியோகத்திலும் பல்வேறு பிரச்சினைகள் உள்ளதாக முறைப்பாடுகள் தெரிவிக்கின்றன. எனவே உரிய முறையில் மணல் விநியோகம் சீர் செய்யப்படும் என்றார். (சு-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்கிலீக்ஸ் வெளியிட்ட...

தெரிவித்தனர்.

இவ்வாறான தகவலில் உண்மை எதுவும் இல்லை.ஏனெனில் அவ்வாறு எதுவும் நடைபெறவில்லை என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதிபடக் கூறினார்.

நாங்கள் இவ்வாறான சம்பவங்களில் ஈடுபட்டிருந்தோமானால் நாடாளுமன்றத் தேர்தலில் மூன்று ஆசனங்களைப் பெற்றிருக்க மாட்டோம் என்றார்.

இதேவேளை ரவிராஜ் மற்றும் ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோரின் படுகொலைகளுக்கும் தமக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என பிரதி அமைச்சர் முரளிதரன் தெரிவித்தார். விக்கிலீக்ஸ் வெளியிட்ட தகவல் குறித்து கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைக் கூறினார். இவர்கள் குறித்து விக்கிலீக்ஸ் இணையத்தளம் குறிப்பிட்டுள்ளதாவது,

வடக்கு,கிழக்கு மாகாண தமிழ் வர்த்தகர்களிடம் இருந்து கருணா குழுவினர் மற்றும் ஈ.பி.டி.பியினர் கப்பம் பெற்றதாக விக்கிலீக்ஸ் இணையத்தளம் அறிவித்துள்ளது.

பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் உத்தரவுக்கு அமையவே வடக்கு, கிழக்கு மாகாண தமிழ் வர்த்தகர்களிடம் இருந்து இவர்கள் கப்பம் பெற்றதாக விக்கிலீக்ஸ் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான அமெரிக்க தூதரகத்தினால் 2007ஆம் ஆண்டு மே மாதம் 17ஆம் திகதியிடப்பட்டு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கப்பட்ட இரகசிய ஆவணங்களை நேற்றுமுன்தினம் விக்கிலீக்ஸ் வெளியிட்டிருந்தது.

இத் தகவல்களின் பிரகாரம், வடக்கில் இயங்குகின்ற தமிழ் துணைக் குழுக்களின் செயற்பாடுகளில் படையினரைத் தலையிட வேண்டாம் என கோத்தபாய ராஜபக்ஷ உத்தரவிட்டதாக தெரிவித்துள்ளது.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் தற்போது பிரதி அமைச்சராக உள்ள விநாயகமூர்த்தி முரளிதரன், இந்த ஆவணம் அனுப்பப்பட்ட காலப் பகுதியில் அதிக அளவிலான கப்பம் பெற்றதுடன் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டதாகவும் விக்கிலீக்ஸ் வெளியிட்டுள்ள ஆவணங்களில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

படைத் தரப்பினரின் பாலியல் தேவைகளுக்காக வன்னி தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பெண்களை கருணா வலுக்கட்டாயமாக பயன்படுத்தியதாகவும் விக்கிலீக்ஸ் அம்பலப்படுத்தியுள்ளது.

அத்துடன், டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான குழு படைத்தரப்பினருடன் இணைந்து கொலைகளிலும் ஈடுபட்டதாக விக்கிலீக்ஸ் மேலும் குறிப்பிட்டுள்ளது. (எ-1)

# பியசேன...

திகதி 18ஆவது திருத்தச் சட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்தமையால் தன்னை கட்சியிலிருந்து வெளியேற்ற தமிழரசுக் கட்சி தீர்மானித்துள்ளதாக அவர் முறையிட்டுள்ளார்.

தமிழ் பேசும் பிரஜை என குறிப்பிட்டுள்ள இவர், தமிழரசுக்கட்சியின் தலைவர் ஆர்.சம்பந்தன், பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜா மற்றும் நாடாளுமன்ற பதில் செயலாளர் தம்மிக கித்துல்கொட ஆகியோரை பிரதிவாதிகளாக குறிப்பிட்டுள்ளார்.

தமது மனசாட்சிக்கு அமைய தான் 18 ஆவது திருத்தச் சட்ட மூலத்திற்கு ஆதரவாக வாக்களித்திருந்ததாக தனது முறையீட்டில் அவர் குறிப்பிட்டிருந்தார். (ச-5)


திருமறைக் கலாமன்றம்
தயாரித்து வழங்கும்
அசோகா
[வார்த்தைகளற்ற நாடகம்]
இலங்கையிலுள்ள
திருமறைக் கலாமன்ற
பல்லின இளைஞர்கள்
இணைந்து வழங்கும் படைப்பு
காலம்: 18.12.2010 சனிக்கிழமை [இன்று]
நேரம்: மாலை 6.00 மணி
இடம்: கலைத்தூது கலையகம்
286,பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(C-1843)
அனைவரையும் அன்புடன்
அழைக்கின்றோம்.
திருமறைக் கலாமன்றம்
238,பிரதான வீதி,யாழ்ப்பாணம்.


# மனித உரிமை மீறல் செயல்...

சார்பற்ற நிறுவனங்கள் செலவு செய்த பணத்தின் ஒரு பகுதியை புலிகள் தமக்குத் தரும்படி கேட்டனர்.

பலவந்தமாக படைக்கு ஆட்சேர்க்கும் முறை அங்கு காணப் பட்டது.அத்துடன் அவ்வியக்கத்தில் சேர மறுத்தவர்கள் இரவில் பலவந்தமாக இழுத்துச் செல்லப்பட்டனர் என்று இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகத்துக்குத் தகவல்கள் கிடைத்துள்ளதாக ஒரு கேபிள் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் 18-25 வயதுக்கிடைப்பட்ட ஒருவரையாவது போராட்டத்திற்கு தரும்படி விடுதலைப் புலிகள் கேட்டனர்.

கட்டாய ஆட்சேர்ப்புக்குள்ளாகுபவர்கள் 18 வயதினைக் கடந்தவர்களை இராணுவ சேவைக்குச் சேர்ப்பது குறித்து சர்வதேச சமூகம் கேள்வி கேட்க முடியாது என அவர்கள் நம்பினர்.

குறிப்பிட்ட முகாம்களில் சேவைக்காக இணையும் படி விடுதலைப் புலிகள் எழுத்து மூலம் அறிவித்தல் விடுத்தனர்.

தவறுபவர்கள் பெரும்பாலும் இரவு நேரங்களில் பலவந்தமாக கொண்டு செல்லப்பட்டனர் என அமெரிக்கத் தூதரகத்திற்கு மேற்படி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அதேவேளை இவ்வருட ஆரம்பத்தில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்திற்குப் பரிமாறப்பட்ட கேபிள் தகவல் குறிப்பொன்றில் அண்மைக் காலத்தில் இலங்கை அரசாங்கத்தின் மனித உரிமை விவகாரங்களில் முன்னேற்றம் காணப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-5)

# தமிழ்க் கட்சிகளின்...

எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

தமிழ்க் கட்சிகளின் அரங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற சந்திப்பையடுத்து இரு தரப்பிலும் தலா மூவர் கொண்ட உபகுழுவை நியமிப்பதற்கு இணக்கம் காணப்பட்டது.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு ஏற்கெனவே இக் குழுவுக்கு மூவரை நியமித்துள்ளது. இதேவேளை உப குழு உறுப்பினர்களின் எண்ணிக்கையை இரு தரப்பிலிருந்தும் தலா 5 ஆக அதிகரிக்க வேண்டுமென தமிழ்க் கட்சிகளின் அரங்கம் வலியுறுத்தியுள்ளது. (ச-5)

# பதில் துணை...

ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க அறிவித்துள்ளதாக, யாழ் பல்கலைக் கழக பதிவாளர் வி.காண்டீபன் தெரிவித்தார். (ச)

# பிரித்தானிய அரசாங்...

நேற்று பிரித்தானிய வெளிநாட்டு அமைச்சரை சந்தித்துப் பேசிய பாதுகாப்பு அமைச்சர் லியம் பொக்ஸ் தனது பயணத்தை பிற்போடுவதாக அறிவித்தார்.

இது தொடர்பாக செய்தி வெளியிட்டுள்ள கார்டியன், கொழும்பு தொடர்பான பிரித்தானியாவின் நிலைப்பாட்டை இப் பயணம் பாதிக்கும் என பிரித்தானிய வெளிநாட்டு அமைச்சர் வில்லியம் ஹேக் கருதுவதாக தெரிவித்துள்ளது.

பிரித்தானிய அரசினதும் எதிர்க்கட்சிகளதும் விமர்சனங்கள் காரணமாக தனது பயணத்தை நிறுத்தவேண்டிய நிலைக்கு லியம் பொக்ஸ் தள்ளப்பட்டுள்ளதாகவும் கார்டியன் குறிப்பிட்டுள்ளது. இதேவேளை இலங்கைக்கான பயணத்தை தவிர்க்கும்படி வேண்டி பிரித்தானிய தமிழர் பேரவை பாதுகாப்பு அமைச்சருக்கு கடிதமொன்றை எழுதியிருந்தது.

இப் பயணம் போர் குற்றம் தொடர்பாக குற்றம்சாட்டப்பட்டுவரும் இலங்கைக்கு தவறான செய்திகளை வழங்கிவிடும் என பிரித்தானிய தமிழர் பேரவை தமது கடிதத்தில் சுட்டிகாட்டியிருந்தது. (ச-5)


WANTED RESIDENTIAL BUILDING FOR RENT

"A CORPORATE OFFICE NEEDS A DECENT RESIDENTIAL BUILDING ON RENT FOR ITS HEAD IN CENTRAL JAFFNA WITH FOUR BED ROOMS, LARGE LIVING/GUEST AREA SPACIOUS LAWNS IN FRONT AND BACK OF THE HOUSE WITH CLEAR TITLE ON A MAIN ROAD. INTERESTED PARTIES MAY SEND THEIR OFFERS IMMEDIATELY IN CONFIDENCE C/O 89, BROWN ROAD,JAFFNA". (3259)



நியூ சிற்றி றேடேர்ஸ் மலிவு விற்பனை
சகல விதமான றேடியோக்களையும் கசற் றெக்கோடர்களையும் கார் றேடியோக்களையும் ,டிஸ் ரிவிகளையும் 14",21 "கலர் ரிவிகளையும் கிரைண்டர்களையும் ரைஸ் குக்கர்களையும் சார்ச் லைற்களையும் அயன் பெட்டிகளையும் கொட் பிளேட்களையும், சப்பிளைசர்களையும் அம்பிளி பயர்களையும் வவல்ஸ்களையும்,பூவர்களையும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளவும் மேற்குறிப்பிட்ட பொருட்களை உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ளவும் நாடுங்கள்.
31.12.2010 வரை
நியூ சிற்றி றேடேர்ஸ்
319 A, K.K.S. றோட் ,யாழ்ப்பாணம்.
T.P.: 0212223226
(C-1842)



MyWay English ஆங்கில பயிற்சிநெறி
ஆரம்பம் : 18.12.2010 காலம் : சனி, ஞாயிறு – 3 மாதம்
அரச, தனியார் அலுவலர்கள், பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்கள், இளைஞர், யுவதிகள் மற்றும் A/L எழுதிய மாணவர்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்
பிரிவுகள் : 8 – 9, 9 - 10, 10 – 11, 11 - 12, 1 – 2, 2 - 3
தனியார் அலுவலர், இளைஞர் யுவதிகளுக்கும் அனுமதி உண்டு
இலக்கண கற்றலோ, எழுத்துப்பயிற்சியோ இன்றி ஆங்கிலத்தில் ஒரு சொல்கூட தெரியாதவர்களும் 3 மாதத்தில் முழுமையாக ஆங்கிலத்தில் பேச முடியும். வகுப்புநேரம் தவிர ஒரு நிமிடமேனும் மேலதிகமாக செலவுசெய்ய தேவையில்லை
ஒவ்வொரு பிரிவிலும் ஒருசில இடங்களுக்கே அனுமதி உண்டு
MyWay 182, Stanley Rd Jaffna 077 33 63 456



STUDY IN UK
IELTS அவசியமில்லை
யாழ்.நகரில் மிகக்குறைந்த செலவில் உங்கள் கனவுகளை நனவாக்கிட உங்கள் நம்பிக்கையான நண்பன்.

❁ கல்லூரிக் கட்டணம் அதிகூடிய தொகை 2000 பவுண்ஸ் மட்டுமே.
❁ சேவைக் கட்டணம் முற்றிலும் இலவசம்
❁ மிகக்குறைந்த செலவில் Sponsor வசதிகள்.
❁ பிரபலமான சட்டத்தரணிகளின் அனுசரணையுடன் Documentation வசதிகள்
❁ குடும்பமாகக் கல்வி பயிலக்கூடிய வாய்ப்புகள்
❁ லண்டனில் தரம் வாய்ந்த கல்லூரிகள்/பல்கலைக்கழகங்களில் அனுமதிகள்
❁ Visaவுக்கான 100% உத்தரவாதம்.
JANUARY ADMISSIONக்கான இறுதிவாய்ப்பு
தொடர்பு: 0770871616
(3257)
Student Visa வுக்கான விதிமுறைகள் கடுமையாக்கப்படுவதற்கு முன்பாக இறுதி வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.
VISA பெற்றுக் கொண்டபின்னரே கல்லூரிக் கட்டணம் செலுத்தும் வாய்ப்பு
December முடிவு வரை மட்டுமே.
அலுவலக முகவரி
245,பலாலி வீதி,கந்தர்மடம்.
(Baby Photo அருகில்)
அலுவலக நேரங்கள்
திங்கள் - சனி வரை காலை 9.00-பிற்பகல்3.30


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.12.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org